Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள்: 06    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01    பிரமோதூத ஆண்டு வைகாசி மீ 24 ஆம் உ    வியாழக்கிழமை    (07 - 06 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஃ 13    ஓசை 109

## சொய்சா வழக்கில் சட்டத்தரணி பயமுறுத்தல்

(கொழும்பு)

பத்திரிகையாளரான றிச்சேட்டி சொய்சாவைக் கடத்திச்சென்று கொலை செய்தது தொடர்பான விசாரணைகளில் சொய்சாவின் தாயாரான மனோகரி சரவணமுத்துவின் சார்பில் ஆஜராகும் பேர்ட்டி வீரக்கோனைக் கொலைசெய்யப் போவதாகப் பயமுறுத்தி தொலைபேசி அழைப்புகளும், கடிதங்களும்வந்துள்ளனவாம். இப் பயமுறுத்தல்கள் பற்றித் தாம் ஆழ்ந்த கவலையும், கரிசனையும் கொண்டிருப்பதாக வழக்கறிஞர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வழக்கறிஞர்கள் சங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

(6ஆம் பக்கம் பார்க்க)

வாகன விற்பனை விவகாரத்தில்

## எம். பிக்களின் கௌரவத்தை அரசு பாதுகாக்க வேண்டும்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் வரியின்றி கொள்வனவு செய்த வாகனங்களின் விற்பனை தொடர்பாக விசாரணை நடைபெறும்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் கௌரவத்தை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சி பதில் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

இது தொடர்பாக அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று பிரதமர் டி. பி. விஜயதுங்கா இதற்கு பதிலளிக்கையில் கூறினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு ஊழியர் சேகரிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா, பியகம போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு இலங்கை முழுவதிலும் இருந்து ஆட்கள் திரட்டப்படுகின்றனர்.

இவ்வர்த்தக வலயங்களுக்கு ஐயாயிரம் வேலை வாய்ப்புக்கள் உள்ளதாகவும், இதற்கு 18 வயதுமுதல் 25 வயதுவரையானோர் விண்ணப்பிக்கலாம் எனவும். குறைந்த பட்சம் 8ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும், தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுப் பணிப்பாளர் நிஸங்கா விஜயவர்த்தனா தெரிவித்தார்,

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பணிப்புரைக்கு இணங்க இன விகிதாசார அடிப்படையிலான ஆள் திரட்டல் கொள்கை கடைப்பிடிக்கப்படும் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.

அரசியல்வாதி

## பொதிகளைச் சோதனையிடத் தவறிய அதிகாரி வேலைநீக்கம்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் மூவரின் பொதிகளைச் சோதனையிடத் தவறிய சிரேஷ்ட சுங்க அதிகாரி ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் குறித்துஜனாதிபதி பிரேமதாசாவுக்குத் தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்தே இவர் இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டார்.


அரசியல்வாதிகளும் சுங்கச் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட. வேண்டும் என்ற ஜனாதிபதியின் புதிய விதிமுறைகளை இவர் மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## உணவு முத்திரை பெற

வட - கிழக்கு

# மாகாணசபையை கலைத்து தேர்தலுக்கு அவசர சட்டம்!



## கடத்தல் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 4050 கிலோ வெங்காயமும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபிடவைகளும், தலை அலங்காரப் பொருட்களும், சுமார் இருபது பொதி எவர்சில்வர் பொருட்களும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பொருட்

## பாராளுமன்றத்தில் நிறைவேற்ற அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

செயல்படாமலிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்துவதற்கு அவசரமாகச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சட்டமா அதிபரும் சட்ட வல்லுநர்களும் தயாரித்து வரும் இச் சட்டம் உயர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அவசரமாக நிறைவேற்றப்படும்.

அமைச்சரவை மேற்கொண்ட இந்த முடிவைப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று பத்திரிகையாளர் சந்திப்பின்போது எடுத்துக் கூறினார்.

மாகாண சபை கலைப்பு சம்பந்தமாக ஜனாதிபதிக்கு விசேஷ அதிகாரம் வழங்கப்படவிருக்கிறதா என்ற நிருபர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், ஜனாதிபதிக்கு விசேஷ அதிகாரம் எதுவும் தேவைப்படாது என்று அமைச்சர் ரஞ்சன் பதிலளித்தார்.

மாகாணசபைத் தேர்தலின்போது புலிகள் ஆயுதம் வைத்திருப்பார்களா, கீழே போட்டு விடுவார்களா? என்று ஒரு நிருபர் கேட்டபோது தேர்தலை ஆயுதம் வைத்துக் கொண்டு நடத்துவதில் அர்த்தமில்லையென்றும் தேர்தல் சமயத்தில் புலிகள் ஆயு

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை கலைப்பு சட்டம்: உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும்

(கொழும்பு)

மாகாண சபையைக் கலைப்பது சம்பந்தமான சட்டநகல் இன்று உயர் நீதி மன்றத்தின் அங்கீகாரத்திற்காக

ளர் தெரிவித்தார்.



வரும் இச் சட்டம் உயர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அவசரமாக நிறைவேற்றப்படும்.

அமைச்சரவை மேற்கொண்ட இந்த முடிவைப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று பத்திரிகையாளர் சந்திப்பின்போது எடுத்துக் கூறினார்.

மாகாண சபை கலைப்பு

தலை ஆயுதம் வைத்துக் கொண்டு நடத்துவதில் அர்த்தமில்லையென்றும் தேர்தல் சமயத்தில் புலிகள் ஆயு

(6ஆம் பக்கம் பார்க்க)

# போதிகளைச் சோதனையிடத் தவறிய அதிகாரி வேலைநீக்கம்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் மூவரின் பொதிகளைச் சோதனையிடத் தவறிய சிரேஷ்ட சுங்க அதிகாரி ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் குறித்துஜனாதிபதி பிரேமதாசாவுக்குத் தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்தே இவர் இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

அரசியல்வாதிகளும் சுங்கச் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் புதிய விதிமுறைகளை இவர் மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# உணவு முத்திரை பெற 12 லட். பேர் தகுதி

(கொழும்பு)

உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதியுடைய பன்னிரண்டு லட்சம் பேர் நாட்டில் இருப்பதாகப் புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நல இராஜாங்க அமைச்சர் திருமதி சமந்தா கருணாரத்தினா தெரிவித்தார்.

இவர்களுக்கு இதனை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதியில்லாத பலரும் இவற்றைப் பெற்றுள்ளதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை ரத்துச் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் தீவிரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, அகதிகளாகி பொதுசன உதவி நிதி பெறத் தகுதியுடையவர்களுக்கு அது வழங்கப்படும் இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# பாடசாலை பிரச்சினை பற்றி ஒரு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் பிரச்சினைகளும் எதிர்கால நடவடிக்கைகளும் என்ற தலைப்பில் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும் இணைந்து ஒரு கலந்துரையாடல் செய்ய உள்ளனர்.

இக் கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பத்தாம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் காலை பத்துமணியளவில் இடம்பெற உள்ளது. இதில் அனைத்து கல்வி அதிகாரிகள் அதிபர்கள் எல்லோரும் கலந்து கொள்வர்.

# தமிழ்நாட்டுப்பொலிசாருக்கு ஏ. கே. 47 பயிற்சி

(சென்னை)

தமிழக அரசின் கோரிக்கையின்படி தமிழகப் பொலிசாருக்கு ஏ. கே. 47 துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் கரையோரப் பகுதியில் இலங்கைத் தமிழ் போராளிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காகவும், தமிழகத்தில் ஈழப்போராளிகளினால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுப்பதற்காகவும் தமிழகத்தில்உள்ளஐநூறு விசேட பொலிஸ் படையைச் சேர்ந்த பொலிசாருக்கு ஏ. கே. 47 போன்ற நவீன ஆயுதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சியின் பின்னர் இவர்கள் தமிழகக்கரையோரப் பகுதியில் கள்ளக்கடத்தல், ஆயுதம், அபாயகரப் பொருட்கள் போன்றவற்றை கடத்துவதை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடுவார்கள்.

# அரச அதிபரின் ஜீப் கடத்தல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் ஜீப்வண்டி இனந்தெரியாதவர்களினால் நேற்றுக் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

# கடத்தல் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 4050 கிலோ வெங்காயமும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபிடவைகளும், தலை அலங்காரப் பொருட்களும், சுமார் இருபது பொதி எவர்சில்வர் பொருட்களும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பொருட்கள் அனைத்தும் வடபகுதி சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் கடத்தலில் ஈடுபட்ட ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டு மேல் விசாரணைக்குள்ளாக்கப்பட்டு பின்னர் இவர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபை கலைப்பு சட்டம்: உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும்

(கொழும்பு)

மாகாண சபையைக் கலைப்பது சம்பந்தமான சட்டநகல் இன்று உயர் நீதி மன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப் படவிருக்கிறது இந்த சட்ட நகலுக்கு அங்கீகாரம் வழங்குவதா இல்லையா என்பதை உயர் நீதிமன்றம் இன்னும் ஒரு வாரத்தில் முடிவு செய்யும்.

மாகாண சபையைக் கலைக்கும் சட்டம் பதின்மூன்றாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்கு முரணானதாக அமையுமாயின் உயர் நீதிமன்றம் அதனை நிராகரிக்கலாம். அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேற்றப்பட வேண்டுமெனத் தீர்ப்பளிக்கலாம்.

மாகாண சபையைக் கலைக்கும் சட்ட நகலின் அடிப்படையான வாதங்களை அரசு இன்னும் பகிரங்கப்படுத்தவில்லை இந்த வாதங்களின் அடிப்படையில்தான் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை அளிக்குமென அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்தனர்.

# ஆசிரியர் ஒரு பாடசாலையில் நிரந்தர இடமாற்றத் திட்டம் - லலித்

(கொழும்பு)

பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரை நியமித்தால் அவர் இடமாற்றமின்றி அங்கேயே தொடர்ந்து பணியாற்றும் வகையில் இடமாற்றத் திட்டமொன்று வகுக்கப்படவிருப்பதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

மாணவர்கள் நலனைப் பிரதானமாகக் கொண்டு பாடசாலைத் தேவைகளை அனுசரித்து ஆசிரியர் மாற்றம் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# தபால் ஊழியர் மீது விசாரணை

(நெடுந்தீவு)

மது போதையில் நெடுந்தீவு தபால் நிலைய ஊழியர்கள் வீதியிற் சென்ற மாணவரைத் தாக்கியதாக அறியப்படும் செய்தி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள தபாற் திணைக்கள அதிகாரி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## மதியஉணவு முத்திரைக்கு

# அங்கீகரிக்கப்பட்ட பொருள் மட்டுமே மாணவர் பெறலாம்

(வடமராட்சி கிழக்கு)

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட உணவுப்பொருட்களையும் பாடசாலைப்பொருட்களையும் மாத்திரமே மாணவர்களின் மதிய உணவு முத்திரைகளுக்கு கூட்டுறவுக் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வி அமைச்சு இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றினை சகல மாகாணக்கல்விச் செயலாளருக்கு ஊடாக பிராந்தியக் கல் விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இவ் உணவுப் பொருட்கள் உள்ளூரில் விளைவிக்கப்பட்டனவாகவே இருக்க முடியும். கோதுமை மாவினையோ, அல்லது பாடசாலைப்பொருட்களைத்தவிர்ந்த ஏனைய

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# "நானும் பத்திரிகையாளனாக ஆகிவிட்டேன்" அமைச்சர் ரஞ்சன்

(கொழும்பு)

''நானும் ஒரு பத்திரிகையாளனாகி விட்டேன்'' என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று அமைச்சரவைத் தீர்மானங்களை எடுத்துக் கூறுவதற்காக நடந்த வாராந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறினார்.

'போராட்ட முன்னணி' என்ற தலைப்பில் கையில் வைத்திருந்த ஒரு துண்டுப் பிரசுரத்தை அவர் நிருபர்களுக்குக் காட்டினார்.

சென்ற வாரம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் 'திஐலண்ட்' பத்திரிகை நிருபர் விதண்டாவாதமாகக் கேள்விகள் கேட்டபோது என்னை ஆத்திரமூட்டும் கேள்விகளை தொடர்ந்து கேட்டால் ஜெயிலுக்குள் தள்ளுவேன் என்று அமைச்சர் ரஞ்சன் கேட்டதும் இதுபற்றி ஐலண்ட் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்ததும் தெரிந்ததே.

இதுபற்றி அமைச்சர் ரஞ்சன் தமது துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டு, உபாலி விஜயவர்த்தனாவுக்கும் அவரது மனைவிக்கும் (ஐலண்ட் பத்திரிகை உரிமையாளர்கள்) கொலைப் பயமுறுத்தல்கள் வந்தபோது தம்மிடம் பாதுகாப்புக் கோரியதாகவும் தாம் அவர்களுக்குப் பாதுகாப்பளித்ததாகவும் அதுபற்றியெல்லாம் ஐலண்ட் பத்திரிகை எழுதவில்லையே என்றும் அமைச்சர் ரஞ்சன் கேட்டார்.

## தடுத்து வைக்கப்பட்ட

# மூன்று இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் விடுதலை

(மட்டக்களப்பு)

இரு வாரங்களுக்கு முன்னர் கல்முனையில் வைத்து விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட மூன்று இலங்கை இராணுவத்தினர் நேற்று மாலை மட்டக்களப்பில் விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு விமானப் படை முகாமில் வைத்து விமானப்படை அதிகாரிகள் முன்னிலையில் இந்த மூவரும் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலன், மாவட்ட அமைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சுற்றாடல் பாதுகாப்பு பாடசாலைகளிலும் போதனை

(கொழும்பு)

இலங்கையில் உள்ளஅனைத்து பாடசாலைகளிலும் சுற்றாடல் பாதுகாப்பு ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது என சுற்றாடல் அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்.

உலகச் சுற்றாடல் பாதுகாப்புத் தினத்தை குறிக்கும் முகமாக கொழும்பில் நடந்த மகாநாடு ஒன்றிலேயே அமைச்சர் விமல் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு

# உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள உயரதிகாரிகளுக்கானமா நாடு இம்மாதம் 14ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் பிரதேச சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

சூழலை மாசுபடுத்தக்கூடிய தொழிற்சாலைகளை நிறுவு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு சேச்லேனில் நல்ல சுற்றாடலிலுள்ள காணியும் நல்லூர் ராணி வீதியிலுள்ள காணியும் மன்னார் இலுப்பைக் கடவையிலுள்ள வயல் காணிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: நா. வ. கந்தையா அன் சன்ஸ், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு சந்தை, நல்லூர். (R.828)

### 21ஆவது ஆண்டுவிழா கிரிக்கெட்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 21ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு ஜெட்லைனேர்ஸ் விளையாட்டுக் கழகம் 7 பேர் கொண்ட 12 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி, 6 பேர் கொண்ட கால் பந்தாட்ட சுற்றுப் போட்டி என்பனவற்றை கழகங்களிடையே நடாத்தவுள்ளது.

போட்டிகள் யாவும் ஜெட்லைனேர்ஸ் கழக மைதானத்தில் நடைபெறும்.

இப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். (42)

### வாடகைக் கார் இயக்குனர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வாடகைக் கார் இயக்குனர் சங்கக் கூட்டம் அண்மையில் யாழ். மனோகரா திரையரங்கில் அரசியல் பிரிவு யாழ். பொறுப்பாளர் பொன்மாஸ்டர் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினார்கள். தலைவர்: பொ. அந்தோனிப்பிள்ளை உபதலைவர்: திரு எஸ். திருச்செல்வம் செயலாளர்: ச. க. இரத்தினம் உபசெயலாளர்: க. இரத்தினம் பொருளாளர்: பொ கந்தசாமி. நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.


உற்பத்தி பெருக

இலாபகரமான **கோழித்தீனை நாடுங்கள்!**

**பிறிமா மாஸ் வகைகள்**

உத்தரவுபெற்ற மொத்த விற்பனையாளர்கள்

ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் ஓடருக்கு சகாய விலையில் பெறலாம்.

மற்றும் கால்நடைத் தீனிகள் யாவும் விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு:

**(F) பாம் நீட்ஸ்**

கே. கே. எஸ். வீதி,
மல்லாகம்.

B. 980



யாழ்நகரின் தன்னிகரற்ற உற்பத்தியாளர்கள்...

அரிசி ஆலை மில் உபகரணங்கள் உற்பத்தியாளர்கள்
ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்...

மற்றும் மின் ஒட்டு வேலைகள் யாவும் திறமையான முறையில் செய்துதருகிறோம்.

**ரதி இரும்புத் தொழிலகம்**

கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

உரிமை- கா. தம்பித்துரை
(பாலசிங்கம்) (B.979)



உங்கள் மரங்களை நியாயமான விலையில் திறமையான முறையில்

குறித்த தவணையில் அரிவு வேலை செய்யவும்


## இன்றைய திரைவானில்

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்
ஹாஸ்யச் சித்திரம்
**STUCK ON YOU**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(Colour)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-30, 7-00, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
**'ALIENS'**
Packed with
Action, Thrill & Suspense
வருகிறது
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
4-00 7-00 9-30
**A NIGHT ON THE TOWN**
8ஆம் திகதி முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது.

06. 06. 90
**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
M G R, ஜெயலலிதா,
அசோகன், சுந்தராராஜன்,
பண்டரிபாய், சோ
நடித்த
**தேடிவந்த மாப்பிள்ளை**
(புதிய பிரதி)

**ராஜா (யாழ்)**
தினசரி 4 00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

உரிமை- கா.தம்பித்துரை
(பாலசிங்கம்) (B.979)

| | |
|---|---|
| மின்சாரம்<br>(கலர்) | கமல், கௌதமி நடித்த<br>அபூர்வ சகோதரர்கள் |

## வியாபாரம் பெருக
## விளம்பரம் செய்க

உங்கள் மரங்களை நியாயமான விலையில் திறமையான முறையில்

குறித்த தவணையில் அரிவு வேலை செய்யவும்

ஓடர்களுக்கு தளபாடங்கள் நவீன டிசைன்களில்
பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்....

# சிவதாஸ் அரிவு ஆலை

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

B.975

**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.**
**கேள்விப்பத்திர அறிவித்தலுக்கானதிருத்தம்**
**1000 வெள்ளிப்பதக்கம் வழங்கல்**

எமது 5. 6. 1990 திகதிய மேற்படி கேள்விப்பத்திரத்திற்கான விளம்பரத்தைப் பின்வருமாறு திருத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வெள்ளியினாலான 70 x 55 செ.மீ அளவுடைய நீள்வட்ட வடிவான 1000 பதக்கங்கள் என்பது.

எவர்சில்வரிலான (Eversilver) 70 x 55 மில்லி மீற்றர் அளவுடைய 1000 பதக்கங்கள் என்பதாகும்.

(B/1104) -பதிவாளர்.

வாகன உரிமையாளர்களே!

உங்கள் வாகன வில்லுத்தகடு வேலைகள் மிக உறுதியாகவும் செசி வேலைகள்
திறமையாகவும் எம்மால் செய்து கொடுக்கமுடியும்

அனைத்து ❋ ஒட்டு வேலைகள் ❋ இரும்புக் கதவுகள் ❋ கிறில் வேலைகள் யாவும்
மிக மிக அனுபவம் வாய்ந்தவர்களால் செய்து கொடுக்கப்படும்.

அனைத்து வாகன ரிங்கர் வேலைகள் குறித்த தவணைகளில் நியாயமான முறையில்

விபரங்களுக்கு: செய்து கொடுக்கின்றோம்.

# யாழ்ப்பாணம் இரும்புத் தொழிற்சாலை

பிறவுண் வீதி, (புகையிரத நிலைய அருகாமை) கொக்குவில்.

**JAFFNA IRON WORKS** **BROWN ROAD,** (Near Railway Station) **KOKUVIL,**
(Regd. No. 15044) Prop. A. Kanapathipillai (B.973)

# தென்கொரியா - சோவியத் உறவை சீராக்க நடவடிக்கை

(சான்பிரான்ஸிஸ்கோ)

தென்கொரிய ஜனாதிபதி ரூடேவோவும்,சோவியத்ஜனாதிபதி கொர்பசேவும் இங்கு சந்தித்து பேசினார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் நடைபெற்ற உச்சிமாநாட்டின் பின்னர் சோவியத்தலைவர் இங்கு வந்த போது இச்சந்திப்பு இடம் பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜீக உறவுகள் சீராகுவதற்கு இருதரப்பும் ஒத்துழைக்க வேண்டுமென தென்கொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த நாற்பது வருடங்களாக கம்யூனிஸ்ட் நாடான வடகொரியாவை ஆதரித்து வந்த சோவியத் யூனியன் தற்போது தென்கொரியாவுடன் பேசியிருப்பதுஉலகஅரசியலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

தென்கொரியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் மீண்டும் புதிய உறவு உருவாக நீண்டகாலம் ஏற்படும் எனவும் இரு தலைவர்களும் மனம்விட்டு பேசியதாகவும் தென்கொரிய ஜனாதிபதி கூறியுள்ளார்.

திரு. கொர்பசேவின் கொள்கைகளையும் அவர் பாராட்டியுள்ளார்.

மேற்கு ஜேர்மனியும், கிழக்கு ஜேர்மனியும் ஐரோப்பாவில் இணைந்ததுபோலஆசியாவில் பிரிந்துள்ள வடகொரியாவும் தென்கொரியாவும் இணைய வேண்டும் என்ற கருத்தையும் தென்கொரிய ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேசமயம் தென்கொரியாவுடன் சோவியத் பேசியிருப்பது குறித்து வடகொரியா கண்டனம் தெரிவித்துள்ளது.

## பதின்மூன்று நாடுகளுக்கு நெல்சன்மண்டேலாபயணம்

(ஜொகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல்கொள்கைக்கு பொருளாதாரத் தடைகள் விதிக்க வேண்டும் என்ற விடயத்தை தனது வெளிநாட்டுப் பயணத்தில் கவனம் செலுத்தவிருப்பதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார்.

வட அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பா போன்ற மூன்று நாடுகளுக்கு திரு. நெல்சன் மண்டேலா பயணமானார்.

முதலில்அவர் போஸ்வானா செல்வார்.

## பஞ்சாப்பில் வன்முறைகள்; பஸ்கள் எரிப்பு 19 பேர் பலி!!

(புதுடில்லி)

பஞ்சாப் பொற்கோவிலுக்குள் இந்திய இராணுவம் சென்று சீக்கிய தீவிரவாதிகளை வெளியேற்றிய ஆறாவது வருட நினைவு நாளான நேற்று முன்தினம் பஞ்சாப்பில் சில வன்முறைகள் நடைபெற்றன.

அரசுக்குச் சொந்தமான இருபத்துக்கும் மேற்பட்ட பஸ்கள், சில புகையிரதப் பெட்டிகளும் தீக்கிரையாக்கப் பட்டன.

பத்தொன்பது கிராமவாசிகள் கொல்லப்பட்டனர். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வரிசையாக நிறுத்தி தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

பாகிஸ்தான்-இந்திய எல்லைக் கிராமத்தில் இந்திய இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் எட்டு மணி நேரமாக இடம் பெற்ற மோதலில் ஆறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

## சோவியத் யூனியனில் வெளிநாட்டு மாணவர்கள்

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் 150 நாடுகளில் இருந்து 1,20,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

வெளிநாட்டு மாணவர்களுக்கு முதல் கல்வியாண்டில் ரஸ்ய மொழி மாத்திரம் போதிக்கப்படும். இது தவிர இவர்களுக்குக் குளிர் கால உடைகளும் வழங்கப்படுகிறது.

சிரியா, எகிப்து ஆகிய நாடுகளின் மாணவர்களின் கல்விச் செலவில் பாதியைஅந்நாடுகள் பொறுப்பேற்கின்றன.

மேலும் சில நாடுகள் 10 விகிதச் செலவை வழங்குகின்றன.

110 சோவியத் நகரங்களில் இன்று வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

53 நாடுகளில் சோவியத் கல்வித் தராதரப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் முஸ்லிம்களிடம் ருஷ்தியை ஒப்படைக்கவும்

### அயதுல்லாஹ் காமேய்னி

(தெஹிரான்)

பிரிட்டனில் உள்ள எழுத்தாளர் சல்மன் ருஷ்தியை அங்குள்ள முஸ்லிம்களிடம் ஒப்படைக்குமாறு ஈரானிய மதத் தலைவர்கள் அயதுல்லாஹ் அலி காமேய்னி பிரிட்டிஷ் அரசிடம் கேட்டுள்ளார்.

முஸ்லிம்களை புண்படுத்தும் வகையில் சல்மான் ருஸ்தி வெளியிட்ட சாத்தானின் வசனங்கள் என்ற நூலையடுத்து அவருக்கு சுமார் ஒன்றரை வருடத்துக்கு முன்பு ஈரான் மதத்தலைவர் மரணதண்டனை வழங்கும்படி முன்னர் கேட்டிருந்தார்.

சல்மான் ருஷ்தி பொலிஸ் பாதுகாப்புடன் மறைவிடம் ஒன்றில் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

தான் விதித்த மரண தண்டனை வழங்க இதுவே சரியான முறை என்றும் ஈரானிய மதத்தலைவர் கூறியுள்ளார்.

## சுற்றுலா

(யாழப்பாணம்)

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 300க்கு மேற்பட்ட மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டிருந்தனர்.

# நிறுத்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்களை பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்குக

## தொண்டர் ஆசிரியர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கட்டாயமாக சேவையில் இருந்துநிறுத்தப்பட்டதொண்டர் ஆசிரியர்களை அதே பாடசாலையில் பகுதிநேர ஆசிரியர்களாயாவது சேர்த்துக் கொள்ள வேண்டும் அல்லது ஆசிரியர் பற்றாக்குறையுள்ள வேறு பாடசாலைகளிலாவது அவர்களைச் சேவையாற்ற அனுமதிக்கவேண்டும்.

இவ்வாறு நேற்றுக் காலை கல்வியங்காடு ஸ்ரார் பியூப்பிள் அக்கடமியில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர் கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நல்லூர்த் தொகுதியில் வசிக்கும் சகல தொண்டர் ஆசிரியர்களினது விபரங்களும் சேகரிக்கப்பட்டன. இதேபோல் மற்றைய பகுதிகளிலுள்ள தொண்டர் ஆசிரியர்களின் விபரங்களும் சேகரிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. இவ்விபரங்கள் யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாதிரிச் செயலகத்தினால் கோரப்பட்டிருந்தது.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க ஆவன செய்யுமாறு அண்மையில் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் மாதிரிச்செயலகத்தில் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே பிரஸ்தாப விபரங்கள் கோரப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாகவே நல்லூரில் விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

இதுபற்றி மக்கள் முன்னணி முக்கியஸ்தர் கருத்து வெளியிடுகையில், பல வருடங்களாகச் சம்பளம் எதுவுமின்றியும் சொற்ப பணத்துடனும் பாடசாலைகளில் அரும்பெரும் சேவையாற்றிபாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வழிவகுத்த தொண்டர் ஆசிரியர்களைக் கட்டாயமாகச் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டமை வேதனைக்குரியது. பயிலுனர் ஆரம்ப ஆசிரிய நியமனங்களிலும் இத்தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள், பலவருட சேவை அனுபவமுள்ள இத் தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப் படவேண்டும் என்றார்.

இது பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்காவிடின் பாதயாத்திரை உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளினைத் தாம் தொடர்ந்து மேற்கொள்ளவிருப்பதாகக் கூட்டத்தில் கலந்து கொண்ட தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்தார்கள். (மு)

## சொர்ணபூமி காணிகளுக்கு கூடுதல் சட்ட அந்தஸ்து

(கொழும்பு)

சொர்ணபூமி காணி உறுதிகளுக்குக் கூடுதலான சட்ட அந்தஸ்து வழங்கும் வகையில் சட்ட மூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

இதன்படி இக்காணிகளின் உறுதிகளைப்பெறும் விவசாயிகள் அவற்றைத் தமது எதிர்கால சந்ததியினருக்கு வழங்க முடியுமென காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் வடிவமங்காவ தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டதும் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் கடன் வழங்க வழிவகுக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

## அலுமினியத்தொழிற்சாலை மீண்டும் இயங்க நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் டொலர் அலுமினியச் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் (ROOT) நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இத்தொழிற்சாலை நீண்டகாலமாக தொழில் தகராறுகளினால் சரியான முறையில் இயங்காதிருந்தது. இதனால் பெரிய அளவில் தொழிற்பட்டு வந்த இத்தொழிற்சாலையின் தொழிலாளர், பிரச்சினைகள் பலவற்றை எதிர் நோக்க வேண்டி வந்தது.

இதனை தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் விரிவாக ஆராய்ந்து தொழிற்சாலையுடன்சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் சந்தித்து இதனை மீண்டும் முழு அளவில் இயங்க வைக்கவும் தொழிலாரின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வைக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி இத்தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடினர்.

இவ்வுரையாடலின்பின் ஒரு மாதத்திற்குள் இத்தொழிற்சாலையை மீண்டும் முழு அளவில் இயங்க வைக்க தற்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## சிந்தனைக்கு ஒரு விருந்து; பிணம் செய்த கொலை!

பாரிஸ் நகரில் நடந்த துப்பாக்கி மற்போரில் ஒருவர் சைகை கிடைக்கும் முன்பே சுட்டதனால் எதிரி இறந்து விட்டார். ஆனால் சுட்டவர் பிணத்தை நோக்கிக் குனியும்போது பிணத்தின் தசைநார்கள் விறைத்துச் செயல்பட்டதால் கையிலுள்ள துப்பாக்கி வெடித்து இவரும் கொலையுண்டார்.

★ ★ ★

## ஒசோன் படலம் பாதுகாக்கப்படுமா?

புவியில் வாழும் உயிரினத்துக்கு தீங்கு விளைவிக்கும் சூரியனது புற ஊதாக்கதிர்கள் பூமியை வந்தடையாமல் வளி மண்டலத்தில் உள்ள ஒசோன் எனப்படும் கவசம் தடுத்து வருகின்றது.

மூன்று ஒக்சிசன் அணுக் கொண்ட மூலக் கூறுகளைஉள்ளடக்கிய கவசமாக ஒசோன் படலம் அமைந்துள்ளது.

சூரியனில் இருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள் மனிதர்களுக்கும் பிராணிகளுக்

களை இந்த ஒசோன் கவசம் உறிஞ்சி விடுவதால் நாம்பாதுகாக்கப்பட்டு வருகின்றோம்.

ஒசோன் கவசம் சூரியனுடைய புற ஊதாக்கதிர்களை உறிஞ்சுவதனால் நலிவடைகின்றது. பின் ஒசோன் கவசம் உருவாகிவிடுகின்றது. இது இயற்கை நிகழ்ச்சி.

ஆனால் மனிதனது செயல் பாடுகளினால் இக்கவசம் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றது. குளிர்பதனம் செய்கல

கள் வருடா வருடம் 3 சதவீதத்தினால் அதிகரித்து செல்கின்றது.

இந்த குலோரோ புலோரா கார்பன்கள் ஒசோன் கவசத்தை அழித்து வருகின்றன இவை கீழ் வழிமண்டலத்தை நோக்கி பெதுவாக மேலெழும் போது புற ஊதாக் கதிர்களினால் கட்டட்ட குளோரின் அணுக்களாகமாற்றப்பட்டு இந்த அணுக்களினால் ஒசோன் படலம் அழிக்

## நிலத்தில் இருந்தும் உப்பு பேறப்படுகின்றது

நாம் சாப்பாட்டுக்கு உபயோகிக்கும் சோடியம் குளோரைட் எனப்படும் உப்பு கடல் நீரிலிருந்து மட்டுமல்ல நிலத்தில் இருந்தும் பெறப்படுகின்றது.

வட இந்தியா, சோவியத் ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறு நிலத்தில் இருந்தும் உப்பு எடுக்கப்படுகின்றது.

வட இந்தியாவில் சுரங்கங்களில் இருந்து உப்பு எடுக்கப்படுகின்றது. அமெரிக்காவில் கிணறுகளில் இருந்து உப்பு எடுக்கின்றார்கள்.

★ ★ ★

பெட்டிகளும் தீக்கிரையாக்கப் பட்டன.

மோதலில் ஆறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மரணதண்டனை வழங்கும்படி முன்னர் கேட்டிருந்தார்.

சல்மான் ருஷ்தி பொலிஸ்

சுற்றுலாவொன்றை மேற் கொண்டிருந்தனர்.

வழிவகுத்த தொண்டர் ஆசிரியர்களைக் கட்டாயமாகச்

நிறுவனத்தின் பிரதிநிதிகள் விரிவாக ஆராய்ந்து தொழி

போது ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

## சிந்தனைக்கு ஒரு விருந்து; பிணம் செய்த கொலை!

பாரிஸ் நகரில் நடந்த துப்பாக்கி மற்போரில் ஒருவர் சைகை கிடைக்கும் முன்பே சுட்டதனால் எதிரி இறந்து விட்டார். ஆனால் சுட்டவர் பிணத்தை நோக்கிக் குனியும்போது பிணத்தின் தஸைநார்கள் விறைத்துச் செயல்பட்டதால் கையிலுள்ள துப்பாக்கி வெடித்து இவரும் கொலையுண்டார்.

★ ★ ★

## உலகின் மிகப்பெரியகம்பளம்

வீட்டின் தரைக்கு அழகூட்டுவதற்காக பண்டைக்காலம் தொட்டு கம்பளங்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் அமைந்துள்ள எக்ஸிபிஷன் ஹோலில் விரிக்கப் பட்டுள்ள கம்பளம் சுமார் 8800 சதுர அடி பரப்புடையுதாகும் இதுவே உலகின் மிகப் பெரிய கம்பளமாகவுள்ளது.

சுமார் ஏழாயிரம் சதுர அடி கொண்ட பாரிய கம்பளம் ஒன்றை ஈரான் நாடு இவ்வருடம் ஜனவரி மாதத்தில் பின்னி முடித்துள்ளது. இது உலகின் இரண்டாவது பெரிய கம்பளமாக உள்ளது. கம்பளி நூலாலும் பட்டு நூலாலும் நெய்யப்பட்ட இக்கம்பளம் சுமார் மூன்று தொன் எடையினைக் கொண்டுள்ளது.

35 நெசவாளர்களைக் கொண்டு இக் கம்பளத்தை நெய்வதற்கு 3,27,600 மணி நேரம் எடுத்துள்ளது. அதாவது 4 வருடங்கள் இதன்பெறுமதி சுமார் 4 கோடி ரூபாய் எனமதிப்பிடப்பட்டுள்ளது.

# கதம்பமாலை

## யாழ்ராஜ்

## பூனை போலக் கத்தி நாய் போல் உறுமும் பறவை

(நியூசிலாந்து)

நியூசிலாந்து நாட்டில் மட்டும் காணப்படும் கிவி (Kiwi) எனப்படும் பறவை நாயைப் போல உறுமி பூனையைப் போல கத்துமாம்.

இப்பறவைக்கு சிறகுகள் கிடையாது. பகலில் கண்தெரியாது. இரவில்தான் கண்தெரியும். இது பலவீனமான கண்களை உடையது. இப்பறவை தனது நீண்ட அலகுகளினால் புவியை தட்டித் தட்டி இரை தேடும். பெண்பறவை இட்ட முட்டைகளை ஆண்பறவைகளே அடைகாக்கும்.

## ஜனாதிபதியின் மனைவியை குரங்கு தூக்கிச் சென்றது!

சிம்பன்சி எனப்படும் மனிதக்குரங்கு விலங்குகளில் மிகவும் புத்திக்கூர்மையுடையதாகும். இக் குரங்குகள் கதைப்பதற்கு தேவையான உறுப்புக்களை கொண்டிருந்த போதிலும் பேசுவதை நிர்வகிக்கின்ற மூளைப் பகுதி வளர்ச்சியடையாமல் இருப்பதால் பேசமுடியாத மிருகமாகவேயுள்ளது.

இவ்வகை மனிதக்குரங்கு ஒன்று 1914 இல் பிரெஞ்சு நாட்டு ஜனாதிபதியின் மனைவியை தூக்கிச்சென்று உயர்ந்த மரத்தின் உச்சியில் பல மணி நேரம் வைத்திருந்தது. ஆனால் 40 ஆண்டுகள் வரை இரகசியமாக காக்கப்பட்ட இச்செய்தி பின்னர் அம்பலமாகியது.

## ஒசோன் படலம் பாதுகாக்கப்படுமா?

புவியில் வாழும் உயிரினத்துக்கு தீங்கு விளைவிக்கும் சூரியனது புற ஊதாக்கதிர்கள் பூமியை வந்தடையாமல் வளி மண்டலத்தில் உள்ள ஒசோன் எனப்படும் கவசம் தடுத்து வருகின்றது.

மூன்று ஒக்சிசன் அணுக் கொண்ட மூலக் கூறுகளைஉள்ளடக்கிய கவசமாக ஒசோன் படலம் அமைந்துள்ளது.

சூரியனில் இருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும்தோல் புற்று நோயை ஏற்படுத்தக்கூடியதாகும். மிகவும் கொடிய வியாதிகளை ஏற்படுத்தி உயிரினத்தை அழித்து விடும் இப் புற ஊதாக் கதிர்களை இந்த ஒசோன் கவசம் உறிஞ்சி விடுவதால் நாம்பாதுகாக்கப்பட்டு வருகின்றோம்.

ஒசோன் கவசம் சூரியனுடைய புற ஊதாக்கதிர்களை உறிஞ்சுவதனால் நலிவடைகின்றது. பின் ஒசோன் கவசம் உருவாகிவிடுகின்றது. இது இயற்கை நிகழ்ச்சி.

ஆனால் மனிதனது செயல்பாடுகளினால் இக்கவசம் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றது. குளிர்பதனம் செய்தல், காற்றின் தட்ப வெப்ப நிலைமை சீராக்குதல், ஏரோசல் குப்பிகள், பிளாஸ்டிக் உற்பத்தி என்பனவற்றால் குலோரோ புலோரா கரியங்கள் வருடா வருடம் 3 சதவீதத்தினால் அதிகரித்து செல்கின்றது.

இந்த குலோரோ புலோரா கார்பன்கள் ஒசோன் கவசத்தை அழித்து வருகின்றன இவை கீழ் வழிமண்டலத்தை நோக்கி மெதுவாக மேலெழும் போது புற ஊதாக் கதிர்களினால் கட்டட்ட குளோரின் அணுக்களாகமாற்றப்பட்டு இந்த அணுக்களினால் ஒசோன் படலம் அழிக்கப்படுகின்றது.

அணுக்குண்டுகள், விமானங்கள், விண்வெளிக்கலங்கள், செயற்கைகோள்கள் யாவும் ஒசோன் படலத்தின் சிதைவுக்கு காரணமாகவுள்ளன.

தற்பொழுது ஒசோன் படலம் நலிவடைவதற்கான காரணங்களில் ஒன்றாக உள்ள குளோரோ புலோரா மீதேன் உற்பத்தியினை கட்டுப்படுத்த பல நாடுகள் முன்வந்துள்ளன.

ஒசோன்படலத்தை அழித்து வரும் குலோரோ புலோரா கார்பன்களின் உற்பத்தியினையும் நுகர்வினையும் கி.பி 2000 ஆம் ஆண்டளவில் தடை செய்யும் ஒப்பந்தத்தில் 84 நாடுகள் கையொப்பம் இட்டுள்ளனஹெல்சிங்கியல் நடைபெற்ற ஐ நா சுற்றுச்சூழல் நிகழ்ச்சித்திட்ட கூட்டத்தில் இவ்வுடன்பாடு எடுக்கப்பட்டது.

## கலைஞர் கருணாநிதி மதில் மேல் பூனை?

கலைஞர் கருணாநிதி அவர்களை அவரது அரசியல் எதிரணியினர் ''மதில் மேல் பூனை'' எனக் கூறிய கூற்றுக்கு அவர் கொடுத்த விளக்கம்.

''ஆம் நான் மதில் மேல் பூனைதான்; எமது திராவிட முன்னேற்றக் கழகம் மதில் மேல் பூனையாக இருக்கிறது. ஏனென்றால் மதிலின் ஒரு பக்கத்தில் அதிதீவிரவாதம்எனும்நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது. மறு பக்கத்தில் பிற்போக்கு வாதம் என்கிற சகதியும் சேறும் நிரம்பிய குளம் இருக்கிறது. இதில் பூனை எந்தப் பக்கம் குதித்தாலும் ஆபத்து''

இந்தப் பக்கம் குதித்தால் நெருப்பு சுட்டெரித்துசாகடித்துவிடும். அந்தப்பக்கத்தில்குதித்தால் சகதியும்சேறும் மூழ்கடித்துப் புதைத்து விடும், எனவே தான் நான் மதில்மேல் பூனையாக ஆபத்தில்லாமல் இருக்கின்றேன்.

நெருப்பு அணைந்தால் மதில்மேல் ஆபத்தில்லாமல் இருக்கும். பூனை அந்தப் பக்கம் பாயும். சேறு காய்ந்தால் இந்தப் பக்கம் பாயும் அது வரை இந்தப் பூனை மதில் மேல் பத்திரமாக ஆபத்தின்றியே இருக்கும் எனக் கலைஞர் கூறினார்.

## மின்சாரத்தை பாய்ச்சும் விசித்திரமான மீன்கள்!

அத்திலாந்திக் சமுத்திரத்திலும், தென் அமெரிக்காவின் அமேசன் நதியிலும், ஆபிரிக்காவில் உள்ள சில ஆறுகளிலும் மின்சாரத்தைப் பிறப்பிக்கும் அசுர மீன்கள் பல காணப்படுகின்றன.

சிலவகையான மீன்களின் தசைநார்களில் மின்சார கலன்கள் காணப்படுவதனால் தான் அவை மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிகின்றது. ஆனால் இம் மின்சாரம் எவ்வாறு மீன்களினால் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

தற்பாதுகாப்பிற்காகவும், உணவைப் பெற்றுக் கொள்வதற்காகவும் மின்சார மீன்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

தென் அமெரிக்காவில் உள்ள அமேசன் நதிக்கரையில் (Electriceel) எலெக்ரிக்ஈல் எனப்படும் ஆபத்தான மீன் காணப்படுகின்றது. சாதாரண மீனைப் போன்று உடலமைப்புடைய இம் மீன் சிறிது கரிய நிறம் உடையது. இதன் நீளம் சராசரியாக 1.8 மீற்றர் ஆகும். இம் மீனின் வாயில் மின் உற்பத்தி உறுப்புகள் காணப்படுகின்றன.

இந்த எலெக்ரிக் மீன்கள் ஆகக் கூடியது 800 வோல்ற் மின்சாரத்தை வெளியேற்றுகின்றன. இவை மனிதர்களையும் மிருகங்களையும் மின்சாரம் பாய்ச்சி கீழே வீழ்த்தி விடக்கூடிய சக்தி கொண்டதாகவுள்ளது. குதிரை போன்ற பெரிய மிருகங்களைக் கூட மின்சாரத்தை வேளியேற்றி வீழ்த்தி விடும் அசுர ஆற்றல் உடையது.

அத்திலாந்திக் சமுத்திரத்தில் சுமார் 90 கிலோ எடையுடைய 1.5 மீற்றர் நீளமான **Torpedo Ray** எனப்படும் எலெக்ரிக் மீன்கள் காணப்படுகின்றன.

ஆபிரிக்காவில் உள்ள சில நதிகளில் 1.2 மீற்றர் நீளமுடைய **Cat Fish** கேற் பிஷ் எனப்படும் மின்சார மீன்கள் உள்ளன.

## நிலத்தில் இருந்தும் உப்பு பேறப்படுகின்றது

நாம் சாப்பாட்டுக்கு உபயோகிக்கும் சோடியம் குளோரைட் எனப்படும் உப்பு கடல் நீரிலிருந்து மட்டுமல்ல நிலத்தில் இருந்தும் பெறப்படுகின்றது.

வட இந்தியா, சோவியத் ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறு நிலத்தில் இருந்தும் உப்பு எடுக்கப்படுகின்றது.

வட இந்தியாவில் சுரங்கங்களில் இருந்து உப்பு எடுக்கப்படுகின்றது. அமெரிக்காவில் கிணறுகளில் இருந்து உப்பு எடுக்கின்றார்கள்.

★ ★ ★

## உலகில் கடல் நீர்மட்டம் உயர்வடைகிறது! பல நாடுகள் அழியலாம்!

உலகில் கடல் நீரின் மட்டம் கடந்த 40 வருடங்களில் 5 முதல் 8 சென்ரி மீற்றர் வரை உயர்வடைந்துள்ளதாக அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகளான றோபட் எடகிங்ஸ், எட்வேட்எவஸ்டீன் ஆகியோர் கண்டு பிடித்துள்ளார்கள்.

புயல்காற்றும் புவியின் வளிமண்டலத்தில் வெப்பநிலை அதிகரிப்பதும் இதற்கு காரணம் என அவர்கள் கூறியுள்ளார்கள். வளி மண்டலத்தில் காபனீரொட்சைட் வாயு அதிகரிக்கும் போது வாயு மண்டலத்தின் வெப்பநிலை உயர்வடைகின்றது.

வீடுகள், தொழிற்சாலைகள், வாகனங்கள் என்பன பெற்றோலியம், நிலக்கரி போன்ற எரிபொருட்களைப் பயன்படுத்துவதனால் காபனீரொட்சைட் வாயு வெளியேற்றப்பட்டு வளி மண்டலத்தை அடைகின்றது.

காடுகள் அருகி வருவதனால் காபனீரொட்சைட் ஒட்சிசனாக மாற்றம் பெறுவதும் குறைவடைந்துள்ளது.

காபனீரொட்சைட் வாயு வளி மண்டலத்தில் அதிகரித்து வெப்பநிலை உயர்வடைவதனால் துருவப் பிரதேச பனிக் கட்டிகள் உருகி கடல்நீர் மட்டத்தை உயர்வடையச் செய்கின்றன.

இவ்வாறு அண்டார்டிகா கண்டத்தின் 49,152கன கிலோ மீற்றர் பனிக்கட்டி உருகியதனால் கடல்நீர்மட்டம் 5 முதல் 8 செ. மீற்றர் உயர்வடைந்தது எனக் கூறப்படுகின்றது.

நவீன செயற்கைக் கோள் மூலம் ஆராய்ந்ததில், துருவப் பனிப் பிரதேச பனிக்கட்டி 2 மீட்டர் ஆழத்துக்கு உருகும் போது கடல் நீரின் மட்டம் ஒரு செ.ரி மீற்றர் உயர்வடையும் எனவும், இதற்கு கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் எடுக்கும் எனவும் மதிப்பிட்டுள்ளார்கள்.

துருவப் பனி உருகுவதனால் புவியின் சுழற்சி வேகமும் பாதிக்கப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

0.2பாகை செல்சியர்ஸ் வெப்பநிலை அதிகரிப்பதற்கு முன்னர் 6000 வருடங்கள் எடுத்தது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் 0.2பாகை செல்சியர்ஸ் வெப்பநிலை புவியில் அதிகரித்துள்ளது.

கி. பி. 2050 ஆம் ஆண்டளவில் சராசரி வெப்பநிலை 3 5பாகை முதல் 4.2பாகை செல்சியர்ஸ் வரை அதிகரிக்கும் என ஐ. நா. சுற்றுச் சூழல் ஆணைக்குழு மதிப்பிட்டுள்ளது.

எனவே அடுத்த நூற்றாண்டில் உயர்வடைந்து செல்லும் கடல்நீர் மட்டத்தினால் கடலை அண்டிய பல நகரங்கள், தீவுகள் வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்படலாம் என அஞ்சப்படுகின்றது.

### ஆதிமனிதன்

ஆதாம், ஏவாள் இருவருக்கும் நமக்கு இல்லாத பல அனுகூலங்கள் இருந்தன. முககியமாக பல் முளைப்பதால் படும் வேதனையில் இருந்து அவர்கள் தப்பமுடிந்தது.

-மார்க் ட்வெய்ன்

## சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டவிளையாட்டுப் போட்டியில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை கலந்து கொண்டு காயமுற்ற விளையாட்டு வீரர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்தனர்.

உருத்திரபுரம் கொத்தணி முதலுதவிப் படைத்தலைவி செல்வி க. கலாமதி தலைமையில் 10பேர் கொண்ட உதவிப் படையினர்சேவையாற்றினர்.

# மூன்றாம் தர அதிபர்கள் கல்வி அமைச்சுக்கு மகஜர்

(கொழும்புத்துறை)

பதில் அதிபர்களாக மூன்று வருடங்கள் கடமையாற்றியவர்களும் பாடசாலையின் தரத்தினால் அதிபர் தரம் ஒன்றைப் பெற உள்ளதும் அதிபர் தரம் இரண்டில் இருப்பவர்களும் அதிபர் தரம் ஒன்றுக்கு உயர்த்தப்பட இருப்பதும் பரீட்சை மூலம் அதிபர் தரம் மூன்றில் பணியாற்றும் அதிபர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

அதிபர் தரம் மூன்றைப் பரீட்சை மூலம் பெற்று மிக நீண்ட காலமாகக் கடமையாற்றி வருபவர்களுக்கு அதிபர் தரம் ஒன்று நியமனம் வழங்கப்படாதது பரீட்சையினால் பதவியைப் பெற்றமைக்குத்தண்டனையா என்ற பாதிக்கப்பட்ட அதிபர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

இது சம்பந்தமாக பிரஸ்தாப மூன்றாம் தர அதிபர்கள் கல்வி அமைச்சுக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

ஆரம்ப பாடசாலைகளில் பதில் அதிபர்களாக இருந்தவர்களுக்கு அதிபர் தரம் மூன்று வழங்காமலேயே 1984 ஆம் ஆண்டு இரண்டாம் தர அதிபர் பதவி நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் 1984 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே பரீட்சை மூலம் மூன்றாம்தர அதிபர் நியமனம் பெற்றிருந்தும் மூன்றில் பல வருடங்கள் சேவையாற்றியவர்களுக்கு 1984ல் இரண்டாம் தர அதிபர் நியமனம் வழங்கப்படவில்லை.

பதில் அதிபர்களாகஇருந்து 1984ல் இரண்டாம் தர அதிபர் நியமனம் பெற்றவர்கள் இன்று முதலாம் தர அதிபர்களாகப் பதவி உயர்த்தப்படும்போது பரீட்சை மூலம் 1984ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அதிபர் தரம் மூன்றில் பதவி வகித்து வருபவர்களுக்கு முதலாம்தரஅதிபர்பதவி உயர்வு வழங்கப்படாமலிருப்பது முறையற்றதும் பாரபட்சமானதுமாகும்.

1984ஆம்ஆண்டிற்குமுன்பே பரீட்சை மூலம் மூன்றாம்தர அதிபர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களை 1984ஆம் ஆண்டு இரண்டாம் தரஅதிபர்களாகப் பதவி உயர்த்தி இருந்தால் அவர்களும் தற்போது முதலாம் தர அதிபர்களாகப் பதவி உயர்த்தப் பட்டிருப்பார்கள்.

மூன்றாம் தர அதிபர்களில் உதவி ஆசிரியர்களாக இருந்தவர்கள் எப்படியோ பதில் அதிபர்களாகி அதன் மூலம் இன்று முதலாம் தர அதிபர்களாகப் பதவிஉயர்வு பெற்று முன்னர் தனக்கு அதிபராக இருந்த மூன்றாம் தர அதிபரையே தனக்குக் கீழ் வைத்திருக்கும் ஒரு வியப்பானநிலை தோன்றியுள்ளது.

பரீட்சை மூலம் அதிபர் பதவிக்குத் தோற்றாமல் பதில் அதிபர்களாக இருந்திருந்தால் இப்பரிதாப நிலை எமக்கு ஏற்பட்டிருக்காது.

மூன்றில் பல வருடங்களாக ஏறக்குறையபதினைந்து வருடங்களுக்கு மேல் மூன்றாம்தர அதிபர்களாக இருந்தவர்களையும் முதலாம் தர அதிபர்களாகப் பதவி உயர்த்துவதே நியாயமானது என்றும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டமூன்றாந்தர அதிபர்கள் தொழிற் சங்கங்களின்கவனத்திற்குதமதுநிலையைத் தெளிவுபடுத்தியுள்ளனர். (24)

## பயிற்சி நிறைவு விழா

(மானிப்பாய்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பயிலுநர் ஆசிரியர் பயிற்சி நிறைவு விழா கடந்த 3ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக மருதனாமட கோட்ட உதவிப் பணிப்பாளர் ஆர். கே. குலசேகரமும், மாகாணக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும் கலந்துகொண்டார்கள்.

பயிலுநர் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகளும், பட்டிமன்றமும் இடம் பெற்றன. பல சிறப்பு விருந்தினர்களும் கலந்து கொண்டு நிகழ்சியைச் சிறப்பித்தனர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வீர வேங்கை வன்னி**

**(இ. சசீந்திரன் - அரியாலை)**

**தமிழீழத்தில் ஜனனம்: 11- 5- 1969**
**தமிழீழத்தில் மரணம்: 7- 6- 1986**

நண்பா!
உனது இலட்சியம் தெளிவானது!
உனது இலட்சியம் உறுதியானது!!
உனது இலட்சியம் தூய்மையானது!!!
அது நிறைவேறும் நாள்... வெகுதூரமில்லை

யாழ். குடாநாட்டுடன் கிளிநொச்சிப் பிரதேசமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வேளையில் கிளிநொச்சி நகரைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து இன அழிப்பை நடத்துவதற்காக ஸ்ரீலங்கா இராணுவம் 7. 6. 86 அன்று கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து பாரியளவில் வெளியேற முயன்ற சமயம் அதை எதிர்த்து நின்று போராடித் தடுத்தவேளை வீரமரணமடைந்த வீரவேங்கை சசீந்திரனுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பரியோவான் நண்பர்கள்.

(R.341)

## தேவை

உடைந்த வெள்ளைப் போத்தல் ஓடுகள் தேவை. எமது தொழிற்சாலைக்கு நேரில் கொண்டுவந்து தருபவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 1 ரூபா 10 சதம் வீதம் வழங்கப்படும். எமது தொழிற்சாலைக்காக எவராவது தமது இடங்களில் போத்தல் ஓடுகளைச் சேகரிக்கலாம். தகுதியானவர்களுக்கு முற்பணம் வழங்கப்படும். போத்தல் ஓடுகள் சேர்ந்தவுடன் எமக்கு அறிவித்தால் உடனடியாக வந்து ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா வீதம் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வோம். யாழ்ப்பாணத்திற்கு வெளி மாவட்டங்களில் உள்ளவர்களும் ஓடுகளைச் சேகரித்து எமக்கு அறிவித்தால் நாம் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்வோம்.

**த பெனின்சுலா குறூப்**
**மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை**

அரஸ்கோ கட்டிடம்,
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(B-1103)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண்ணகம் | | விண்ணகம் |
|---|---|---|
| 14 - 5 - 1956 |  | 12 - 5 - 1990 |

**விஸ்வலிங்கம் அன்னலெட்சுமி (கிளி)**

பிறப்பிடம்: 4ஆம் வட்டாரம் புங்குடுதீவு

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவையொட்டி சுகதுக்கங்களில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரில் சமூகம் கொடுத்தவர்களுக்கும், கடித மூலம் அனுதாபம் அனுப்பியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் 11. 6. 90 முற்பகல் நடக்கவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து அன்னாருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


க. விஸ்வலிங்கம் (கணவர்)
வி. ததீஸ்வரி, வி. வளர்மதி
வி. சுபிதா வி. துஸ்டியந்தன்
மக்கள்

இல: 19
அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(R-334)

## 4-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
28 - 05 - 1965



தமிழ்
அன்னையின் மடியில்
07 - 06 - 1986

**தீசன் (சின்னத்துரை மனோகரன்)**

தமிழன் துயர்நீங்கத்


# விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்
விவசாய இரசாயனங்கள்

இன்றோம்.

பரியோவான் நண்பர்கள்.

(R.341)

சமானதுமாகும்.

1984ஆம்ஆண்டிற்குமுன்பே பரீட்சை மூலம் மூன்றாம்தர அதிபர்களாகத் தெரிவுசெய்ய

அரஸ்கோ கட்டிடம்,
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(B-1103)


# விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

## மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின் விவசாய இரசாயனங்கள்

தற்போது வடபகுதியெங்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வெங்காய பயிரைத் தாக்கும் நுனி கருகல், தண்டு வெளிறல் ஊதா கொப்புள நோய், தண்டு அழுகல் போன்ற நோய்களை முற்றிலும் கட்டுப்படுத்த

## பொலிராம் M பாவியுங்கள்.




தற்பொழுது வெங்காய செய்கையாளர்களால் விரும்பிப் பாவிக்கப்படும் ஓர் பூச்சிநாசினி

## பேர்fவெக்தியோன்

வெங்காயச் செய்கையில் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க பேர்fவெக்தியோன் பூச்சிநாசினியை உபயோகியுங்கள்.

FINCHEM AGRO DIVISION


BASF உற்பத்திகளை "பின்கெம்" (FINCHEM) வழங்குகின்றது. சகல விவசாய இரசாயன வியாபாரிகளிடமும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரவேட்) லிமிட்டெட்.**

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவியுங்கள்.)

B-1019

28 - 05 - 1965

தமிழ் அன்னையின் மடியில்

07 - 06 - 1986

**தீசன் (சின்னத்துரை மனோகரன்)**

தமிழன் துயர்நீங்கத்
தமிழீழம் தான் தீர்வு!
அமைக்க அதையெழுந்த
அணிக்கோர் அணியானாய்!
மனத்திடம்தான் மனோகரனோ
மனோகரன்தான் மனத்திடமோ!
சினப்புலிகள் வரிசையிலோர்
தேயாத அம்புலியோ?
விண்ணில் ஒரு சொர்க்கம்
விரித்தமக ரிஷி கூட
மண்ணில் ஒரு சொர்க்கம்
வளர்புலிகட் கீடாமோ?
பிஞ்சு முளைகள்
பெருவிருட்ச நிழல்தந்து
நெஞ்சு ஓமகுண்டத்தில்
நித்தியஅக் கினியானீர்!
தென்றல் உனக்குள்
செனித்த எரிமலைதான்
அன்று கிளிநொச்சித்
தற்காப்பு அனற்போரில்
பதுங்கு குழியமைத்துப்
பகைவர் படைகலக்கி
பிதுங்கி விழியோடப்
பெருவீரம் சாற்றியதோ
குண்டுபட்ட மார்பின்
குருதியொடும் முன்பாய்ந்து
சண்டையிட்டுச் சாய்ந்த
தமிழ் வீர காவியம்நீ!
பிறப்பிற்குப் பின் இறப்பு
பெரும்பாலும்! ஆனால்நீ
இறப்பில் பிறந்தாய்!
எங்கும் உன் உயிரலைகள்!
செக்கச் சிவந்த
திருமேனி பால் வடிந்து
சொக்கச் சிவந்த
சுடர்வதனம் எங்குமடா
வேண்டிடுவோர் ஈழம்
வேண்டுபவர் மோட்சகதி
நீண்டதவம் வீணே!
நிஷ்டை கலைந்தெழுவோம்!
படுகிழங்கள் கூடப்
பாய்புலிக ளாகிநின்று
முடிவிலொரு சொர்க்கம்
முழுதாந் தமிழீழம்
படைப்போம் எனப்பொங்கப்
பண்ணுவதால் புலிதீரம்
எடுப்போம் சபதம்இன்றே!

உன் நினைவால் வாடும்
அப்பா, அம்மா
சகோதர, சகோதரிகள்
உறவினர்கள், நண்பர்கள்

"பூம்புகார்"
மல்லாகம்.

(R-335)

## சிந்தனைக்கு

உயிரை அழிக்கக்கூடிய ஆயுதங்கள் எவற்றையும் நான் ஒருபோதும் கண்டுபிடிக்கவில்லை என்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

- தாமஸ்அல்பாஎடிஸன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 07-06-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

# குட்டி வல்லரசுகளும் ஆயுதக் குறைப்பிற்கு தயாரா?

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஆயுதக் குறைப்புப்பற்றி ஓர் உடன்படிக்கை செய்துள்ளன.

இரு வல்லரசுகளும் உற்பத்தி செய்து வைத்திருக்கும் இரசாயனக்குண்டு உட்பட்ட ஆயுதங்களில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை அழிப்பதற்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் சோவியத் அதிபர் கொர்பச்சேவ் ஒப்புக்கொண்டு உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருக்கின்றனர்.

அமெரிக்க அதிபரும் சோவியத் தலைவரும் சந்திப்பார்களா? சந்தித்தாலும் ஆயுதக் குறைப்புக்குச் சம்மதிப்பார்களா என்ற சந்தேகம் உலகில் பலமாக நிலவியது.

சோவியத்தில் லித்வேனியக் குடியரசு சுதந்திரப் பிரகடனம் செய்திருப்பதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்திருக்கிறது. லித்வேனியாவின் ஒருதலைப் பட்சமான சுதந்திரப் பிரகடனத்தை சோவியத் அதிபர் எதிர்த்து சில பொருளாதாரத்தடை நடவடிக்கையையும் எடுத்திருக்கிறார்.

அதிபர் கொர்பச்சேவின் இந்த நடவடிக்கையை அமெரிக்க அதிபர் புஷ் கண்டித்திருக்கிறார்.

அமெரிக்காவின் இச்செயல்கள் சோவியத்யூனியனின் உள் விவகாரத்தில் தலையிடுவதாகுமென்று சோவியத் அதிபர் கொர்பச்சேவ் அமெரிக்காவை எச்சரித்தார்.

இந்த நிலையில் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசுவதுபற்றியும் ஆயுதக் குறைப்பு சம்பந்தமாக ஓர் உடன்பாட்டுக்கு வருவது பற்றியும் உலகில் சந்தேகம் எழுந்ததில் வியப்பில்லை.

ஆனால் இரு வல்லரசுகளின் தலைவர்களும் எதிர்பார்த்ததற்கு மாறாக ஆயுதக் குறைப்புக்கு சம்மதித்து ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டிருக்கின்றனர்.

சோவியத்தும் அமெரிக்காவும் போட்டிபோட்டுக்கொண்டு சக்திவாய்ந்த நவீன ஆயுதங்களைக் கண்டுபிடித்து உற்பத்தி செய்து வந்தன.

இரு வல்லரசுகளும் மிகப்பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு ஆயுதகங்ளை உற்பத்தி செய்து குவித்தன.

இதன் விளைவாக பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள சிறிய நாடுகள் மீது யுத்தங்களைத் திணித்து அவர்கள் ஆயுதங்கள் பெறுவதிலும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும் ஈடுபட வைத்தன.

மத்திய கிழக்கில் இரு இஸ்லாமிய நாடுகளான ஈரானும் ஈராக்கும் கடந்த எட்டு வருடங்களாகச் சண்டை பிடித்தன. இச்சண்டையில் இரசாயனக்குண்டுகள் பாவிக்கப்பட்டதாக முன்னர் புகார் கூறப்பட்டது.

தன்னிடம் இரசாயனக்குண்டுகள் இருப்பதாக சமீபத்தில் ஈராக் பகிரங்கமாக அறிவித்தது.

காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவுக்கும்

# மலையக மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர்

# இதனால் எம்பின்னால் அணி திரள்கின்றனர்

1990. 05. 29 மலையகமக்கள் முன்னணி கொழும்பில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டைத் தொடர்ந்து எமது விசேட நிருபரால் மலையக மக்கள் முன்னணி யின் செயலாளர் நாயகம் திரு. பி. எ காதர் அவர் களிடம் இருந்து பெறப்பட்ட விசேடபேட்டி.

கேள்வி: மலையகத்தில் அரசியல் வாதிகளும், இளைஞர்களும் கைது செய்யப்படுவதை கண்டித்து வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினால் நடாத்தப்பட்ட பூரணஹர்த்தால் மலையகத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

பதில்: எமது கட்சியின் தலைவர் பி. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து உணர்வு பூர்வமாக மலையக மக்கள் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருந்த போது இந்த ஹர்த்தால் நடைபெற்றது. இப் போராட்டத்தின் போது தொழிற் சங்க சந்தர்ப்பவாத தலைமைகள் கோழைத்தனமாக போராட்டத்தில் இருந்து ஒதுங்கிக் கொண்டிருந்தார்கள். அரசசார்பு தொழிற்சங்கங்கள் இப் போராட்டத்தைத் தமது சரணாகதிவாத அரசியலுக்கான சவாலாக மிக சரியாகவே இனம் கண்டு கொண்டார்கள். அவர்களால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. எனவே அப்போராட்டத்தை கொச்சைப்படுத்த முயன்றார்கள். இச் சமயத்தில் தான் வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த ஹர்த்தால் மலையாக மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு வ'டக்கு கிழக்கு மக்களின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையை மலையக மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் விழிப்புணர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

கேள்வி: இலங்கைதோட்ட தொழிலாளர் சங்க பிரமுகர்கள், ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பல முன்னணி உறுப்பினர்கள், இ. தொ. கா பிரமுகர்கள் ஆகியோர் அண்மைக் காலத்தில் கைது செய்யப்பட்ட போது மலையக மக்கள் மத்தியில் ஏற்படாத எழுச்சி மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன் கைது செய்

னம் மாத்திரம் காரணம் அல்ல. அது எமது மக்களின் அடிப்படை உரிமை சம்பந்தமான பிரச்சனை. இந்த நாட்டில் 150 வருடங்களாக ஐந்து தலைமுறைக்கு மேல் வாழ்ந்து வரும் ஒரு மக்கள் கூட்டம் அதன் விருப்பத்திற்கு மாறாக வெளியேற்றப்படுவது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும். ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 1968-1970 வரை விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அப்போது இந்திய பிரசா உரிமை கோரி விண்ணப்பித்தவர்களின் தொகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை விட குறைவாகவே இருந்தது. இந்தியாவுக்கு செல்பவர்களுக்கு காணி, பணம், வீடு அனைத்தும் வழங்கப்பட்டு ஒரு வசதியான வாழ்வு அமைத்துக்

## பி. ஏ. காதர்

கொடுக்கப்படும் என்ற பொய்யான பிரசாரத்தின் மத்தியிலேயே இவர்கள் இந்தியப் பிரசா உரிமைக்கு விண்ணப்பித்தார்கள். அப்படியிருந்தும் எதிர் பார்த்த அளவு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இந்நிலையில் ஆங்காங்கு வன்செயல்கள் தூண்டப்பட்டு ஒரு பாதுகாப்பற்ற சூழல் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு தான் இந்திய பிரசா உரிமைக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. எனவே இது அவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் மேற்கொண்ட முடிவல்ல. மேலும் இன்று 20 வயசாக இருக்கும் இளைஞர்கள் 1970இல் அதாவது விண்ணப்பம் கோரப்பட்ட காலத்தில் பிறந்திருக்கவில்லை. அன்று 50 வயதாக இருந்தவர்கள் இன்று உயிரோடுஇல்லை. எனவே முன்னைய தலைமுறை அன்று நிலவிய சூழலில் எடுத்த ஒரு முடிவை இன்றைய தலைமுறையினர் மீது திணிப்பது என்ன நியாயம்?

யத் தன்மையைப் பார்ப்போம். இது வரை மலையகத்தில் தொழிற்சங்க வாதிகளே அரசியலுக்கு தலைமை கொடுத்து வந்தார்கள். எனவே மலையக மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்ப்பதிலும் இந்நாட்டில் வாழும் உரிமையை மாத்திரம் கேட்டு பெறுவதிலும் அவர்கள் நாட்டம் காட்டினார்கள். சுருக்கமாகச் சொன்னால் இந்தத் தலைமைகள் அரசியலில் அன்றாடம் வாக்ழ்கை நடத்தியவர்கள். அவர்களிடம் தொலைநோக்குடனான ஒரு நீண்டகால வேலைத்திட்டம் எதுவும் இருக்கவில்லை. மக்களை ஒரு நீண்டகால வேலைத்திட்டத்தின்கீழ் அணி திரட்டவும் இல்லை. மலையகத்தின் சந்தர்ப்பவாத தொழிற்சங்க தலைமைத்துவத்தை மாத்திரமல்ல மலையக மக்களின் அரசியல் பின்தங்கிய நிலையையும் இந்நிலைமை பிரதிபலிக்கின்றது.

களும், ஆயுதம் தாங்கிய இயக்கங்களும் மலையக மக்களுக்கு தலைமை தாங்க முயற்சி செய்து தோல்வியையே கண்டுள்ளன. அதைப் போலவே தெற்குப்பகுதி அமைப்புகளும் கூட மலையக மக்களுக்குத் தலைமை தாங்க முற்பட்டு தோல்வி கண்டுள்ளன. சந்தர்ப்பவசத்தால் ஏதாவது ஒரு வெளி ஸ்தாபனம் தற்காலிகமாக மலையகத்தில் செயற்படலாம். உலகத்திற்கும் தாம் மலையகத்தில் செல்வாக்குப் பெற்றுத்திகழ்வதாக காட்டிக் கொள்ளலாம். உதாரணமாக இன்று யூ.என். பி.யின் லங்கா ஜாதிகதோட்டத் தொழிலாளர் சங்கமே இ. தொ. கா. வைவிட அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் மலையகமக்கள் யூ. என். பியை தமது அரசியல் தலைமையாக ஏற்கவில்லை. இ. தொ. கா. வையே அவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்

தலைமையாக ஏற்றுக்கொள்கிறார்கள். இன்று வடக்கு கிழக்கில் யூ. என். பிக்கும், சுதந்திரக் கட்சிக்கும், ஜே. வி. பி. க்கும் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதோ அதே அளவு செல்வாக்குதான் மலையகத்தில் ஏனைய வெளி ஸ்தாபனங்களுக்கும், மறுபுறத்தில் கடந்த 21ஆம் திகதி ஹர்த்தாலை எடுத்துக் கொள்வோம். இப்போராட்டம் மலையக மக்களின் போராட்டத்துக்கு மலையகத்திற்கு வெளியில் இருந்து ஒரு ஸ்தாபனம் நடத்தியதும் ஆதரவுப் போராட்டமாகும். இப்போராட்டம் இருசமூகங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் மிகவும் வெற்றி பெற்றுள்ளது.

கேள்வி: கடந்த பொதுத் தேர்தலில் திரு. சந்திரசேகரன் (PLOT) புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் அபேட்சகராகப் போட்டியிட்டார். பின்னர் அதிலிருந்து பிரிந்ததேன்?

பதில்: உண்மை என்னவென்றால் புளொட் இயக்கத்துடன் அவர் சேரவும் இல்லை, பின்னர் பிரியவும் இல்லை. நடந்தது இதுதான். திரு. சந்திரசேகரன் தேர்தலில் போட்டியிடுவதாக நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு 4 நாட்களுக்கு முன்தான் (அதாவது 1989-01-02) தீர்மானிக்கப்பட்டது. அனைவரதும் ஏகமனதான தீர்மானம் தனித்து சுயேட்சையாகப் போட்டியிட வேண்டும் என்பதாகவே இருந்தது. ஆனால் சட்டப்பிரச்சினை ஒன்றைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சுயேச்சைக் குழுக்கள் தமது நியமனப் பத்திரத்தை கடைசித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னர் தாக்கல் செய்யவேண்டும். ஆனால் 4 நாட்களே எஞ்சியிருந்தன. இநநிலையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் பேரிலேயே போட்டியிடமுடியும். இச்சந்தர்ப்பத்தில் எந்த நிபந்தனையும் இன்றி காலஞ்சென்ற திரு உமா மகேஸ்வரன் அவர்கள் தமது கட்சி சின்னத்தை இரவலாகக் கொடுத்தார். எனினும் இந்த ஏற்பாடு திரு. சந்திரசேகரனின் ஆதரவாளர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே அவர்கள் தேர்தல் மேடை

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உதவித் தலைவராக இருந்த இவர் 1977 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இ. ஆ. ச. வருடாந்த மாநாட்டில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து தெற்கு இடதுசாரிகளிடையே ஒரு கருத்துப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்து பல கருத்தரங்குகளிலும், விவாதங்களிலும் நேரடியாக பங்கு கொண்டார். அடுத்து, 1983 இனக்கலவரத்தின் பின்னர் மலையக மக்களின் பாதுகாப்பற்ற நிலைமையை நன்குணர்ந்து மலையக மக்கள் தம்மை தாமே காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். மலையக இளைஞர்களை இந் நோக்கோடு ஆயுதபாணிகளாக்கும் முயற்சியில் இறங்கினர். துரதிஷ்டவசமாக இவரது முயற்சி ஆரம்ப கட்டத்தில் இருக்கும் போதே கண்டி பொலீசாரால் கைது செய்யப்பட்டு போகம்பரை, வெலிக்கடை, தங்காலை, பூஜா, மகசீன் ஆகிய சிறைச்சாலைகளில் சுமார் மூன்றரை வருடம் தடுத்து வைக்கப்பட்டார். அரசைக் கவிழ்க்க சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றம் இவருக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனையை வழங்கியது. இவ்வாறு பயங்கரவாத சட்டத்தின் கீழ் அதிஉயர்ந்த சிறைத் தண்டனை பெற்ற பெருமை இவருக்குரியது. 1988 டிசம்பர் 10 ஆந் திகதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலையானார் 1989 ஜனவரி 6 ஆந் திகதி நுவரேலியா தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட பி. சந்திரசேகரனை ஆதரித்து பிரதம அமைப்பாளராக இருந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அதே வருடம் பெப்பிரவரி 20ஆந் திகதி 'மலையக மக்கள் முன்னணி' என்ற புதிய கட்சி தலவாக்கலையில் உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக சந்திரசேகரனும் செயலாளர் நாயகமாக இவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 'மலையக தமிழர்களின் எதிர்காலம்' (1981), '20 ஆம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்', 'மேதின

ஆனால் இரு வல்லரசுகளின் தலைவர்களும் எதிர்பார்த்ததற்கு மாறாக ஆயுதக் குறைப்புக்கு சம்மதித்து ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டிருக்கின்றனர்.

சோவியத்தும் அமெரிக்காவும் போட்டிபோட்டுக்கொண்டு சக்திவாய்ந்த நவீன ஆயுதங்களைக் கண்டுபிடித்து உற்பத்தி செய்து வந்தன.

இரு வல்லரசுகளும் மிகப்பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்தன.

இதன் விளைவாக பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள சிறிய நாடுகள் மீது யுத்தங்களைத் திணித்து அவர்கள் ஆயுதங்களை பெறுவதிலும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும் ஈடுபட வைத்தன.

மத்திய கிழக்கில் இரு இஸ்லாமிய நாடுகளான ஈரானும் ஈராக்கும் கடந்த எட்டு வருடங்களாகச் சண்டை பிடித்தன. இச்சண்டையில் இரசாயனக்குண்டுகள் பாவிக்கப்பட்டதாக முன்னர் புகார் கூறப்பட்டது.

தன்னிடம் இரசாயனக்குண்டுகள் இருப்பதாக சமீபத்தில் ஈராக் பகிரங்கமாக அறிவித்தது.

காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் முறுகல்நிலை தோன்றியபோது இரு நாடுகளுமே அணு ஆயுதப் போருக்கு ஆயத்தமானது தெரியவந்தது.

சோவியத்தும் அமெரிக்காவும் உலக ஆதிக்கப் போட்டியில் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்துக்கொண்டிருக்க அவர்களிடம் ஆயுதங்களை வாங்கும் வளரும் நாடுகளும் ஆயுதப் போட்டியிலீடுபடத் தொடங்கின.

ஜப்பான் மட்டும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற்று உலகச் சந்தையில் அமெரிக்காவுக்கே பெரும் சவாலாகத் தலையெடுத்துவிட்டது.

இந்நிலையில் அணு ஆயுதங்களும் இரசாயனக் குண்டுகளும் உலகின் அழிவுக்கு வழிவகுக்கப் போவதை சோவியத்தும் அமெரிக்காவும் உணர்ந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆயுத உற்பத்திக்குச் செலவாகும் பெருந்தொகைப் பணத்தைப் பொருளாதாரவிருத்திக்குச் செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் சோவியத்துக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இரு வல்லரசுகளும் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டால் உலகம் அழியும் என்பதையும் இருதரப்பும் உணர்ந்துகொண்டதால் மோதலைத் தவிர்த்தே ஆக வேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டியதாயிற்று.

இருதரப்பும் மோதுவதில்லையென்ற முடிவுக்கு வந்தால் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை.

இந்நிலையில்தான் இருவல்லரசுகளும் ஆயுதக் குறைப்புக்குச்சம்மதித்து உடன்பாடுசெய்து கொண்டுள்ளன.

இதர நாடுகளும் இந்த வல்லரசுகளைப் பின்பற்றி ஆயுதக் குறைப்பை மேற்கொள்ளுமா?

களுக்கு வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையை மலையக மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் விழிப்புணர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

கேள்வி: இலங்கை தோட்ட தொழிலாளர் சங்க பிரமுகர்கள், ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பல முன்னணி உறுப்பினர்கள், இ. தொ. கா பிரமுகர்கள் ஆகியோர் அண்மைக் காலத்தில் கைது செய்யப்பட்ட போது மலையக மக்கள் மத்தியில் ஏற்படாத எழுச்சி மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டபோது ஏற்பட்டதற்கு என்ன காரணம்?

பதில்: இன்று மலையகத்தில் மாற்றத்தை விரும்புகின்ற, அந்த மாற்றத்திற்காக தம்மை அர்ப்பணிக்க தயாராக இருக்கின்ற மலையக மக்கள் அனைவரும் மலையக மக்கள் முன்னணியின் பின்னால் அணி திரண்டிருப்பதையே இது காட்டுகிறது.

கேள்வி: இந்திய கடவுச்சீட்டு பெற்றவர்களை இலங்கை அரசு வெளியேற்ற முயலும் போது அதனை உங்கள் கட்சி எதிர்ப்பதேன்?

பதில்: மனிதாபிமானம் அற்ற இச் செயலை நாம் மாத்திரம் அல்ல, மலையகத்தில் உள்ள சகல அமைப்புகளும், வடக்கு கிழக்கு சகல அமைப்புகளும், தெற்கில் உள்ள சகல முற்போக்கு அமைப்புகளும் எதிர்க்கின்றன. நாம் இதனை எதிர்ப்பதற்கு வெறும் மனிதாபிமா

ஒரு பாதுகாப்பற்ற சூழல் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு தான் இந்திய பிரசா உரிமைக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. எனவே இது அவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் மேற்கொண்ட முடிவல்ல. மேலும் இன்று 20 வயசாக இருக்கும் இளைஞர்கள் 1970இல் அதாவது விண்ணப்பம் கோரப்பட்ட காலத்தில் பிறந்திருக்கவில்லை. அன்று 50 வயதாக இருந்தவர்கள் இன்று உயிரோடுஇல்லை. எனவே முன்னைய தலைமுறை அன்று நிலவிய சூழலில் எடுத்த ஒரு முடிவை இன்றைய தலைமுறையினர் மீது திணிப்பது என்ன நியாயம்? ஒருவர் ஒரு நாட்டில் 5வருடங்களுக்கு தொடர்ச்சியாக வாழ்ந்தாலே அவருக்கு அந்நாட்டில் பிரசா உரிமை வழங்க வேண்டும் என்பது சர்வதேச பொது விதியாகும், 150 வருடமாக இந்நாட்டில் வாழும் ஒரு மக்கள் கூட்டத்தை நாடுகடத்த யாருக்கும் உரிமையில்லை. இன்று இந்திய கடவுச் சீட்டு பெற்றவர்களில் 98 வீதமானவர்கள் இலங்கையில் வாழ விரும்புகிறார்கள்.

கேள்வி: இதுவரை மலையக மக்கள் மத்தியில் இருந்து பிரசா உரிமை, சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டு வந்தன. தற்போது மலையக மக்கள் முன்னணி தனியான மாகாண சபை ஒன்றை கோரி வருகிறது. இதன் நியாயத் தன்மையையும் சாத்தியப்பாட்டையும் சற்று விளக்க முடியுமா?

பதில்: முதலில் இதன் நியா

கைது செய்யப்பட்டு போகம்பரை, வெலிக்கடை, தங்காலை, பூஜா, மகசீன் ஆகிய சிறைச்சாலைகளில் சுமார் மூன்றரை வருடம் தடுத்து வைக்கப்பட்டார். அரசைக் கவிழ்க்க சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றம் இவருக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனையை வழங்கியது. இவ்வாறு பயங்கரவாத சட்டத்தின் கீழ் அதிஉயர்ந்த சிறைத் தண்டனை பெற்ற பெருமை இவருக்குரியது. 1988 டிசம்பர் 10 ஆந் திகதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலையானார் 1989 ஜனவரி 6 ஆந் திகதி நுவரேலியா தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட பி. சந்திரசேகரனை ஆதரித்து பிரதம அமைப்பாளராக இருந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அதே வருடம் பெப்பிரவரி 20ஆந் திகதி 'மலையக மக்கள் முன்னணி' என்ற புதிய கட்சி தலவாக்கலையில் உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக சந்திரசேகரனும் செயலாளர் நாயகமாக இவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 'மலையக தமிழர்களின் எதிர்காலம்' (1981), '20 ஆம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்', 'மேதின வரலாறும் படிப்பினைகளும்' போன்ற ஏழுக்கும் அதிகமான நூல்களின் ஆசிரியராகவும் திகழ்கிறார்.

ஒன்றைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சுயேச்சைக் குழுக்கள் தமது நியமனப் பத்திரத்தை கடைசித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னர் தாக்கல் செய்யவேண்டும். ஆனால் 4 நாட்களே எஞ்சியிருந்தன. இநநிலையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் பேரிலேயே போட்டியிட முடியும். இச்சந்தர்ப்பத்தில் எந்த நிபந்தனையும் இன்றி காலஞ்சென்ற திரு உமா மகேஸ்வரன் அவர்கள் தமது கட்சி சின்னத்தை இரவலாகக் கொடுத்தார். எனினும் இந்த ஏற்பாடு திரு.சந்திரசேகரனின் ஆதரவாளர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே அவர்கள் தேர்தல் மேடை தோறும் தேர்தல் முடிந்து ஒரு வாரத்துக்குள் தனியான ஒரு கட்சியை அமைப்பதாக உறுதியளிக்கும்படி வலியுறுத்தினர். இவ்வாறு தான் தேர்தல் முடிவடைந்த ஐந்து நாட்களில் அதாவது, 89.02.20ஆம் திகதி எந்த ஒரு கட்சியுடனும் தொடர்பு அற்ற முறையில் சுயேச்சையான கட்சியாக 'மலையக மக்கள் முன்னணி' உருவானது.

பிரஜா உரிமைக் கோரிக்கை என்றால் என்ன? இந்நாட்டில் வாழும் உரிமையை மாத்திரம் தான் அது குறிக்கிறது. இதை நாம் கெஞ்சித்தான் பெற வேண்டுமா? இது எமது இயல்புரிமை. எனவே எமது கோரிக்கையாக இருக்க வேண்டியது, இந்நாட்டில் சம உரிமையுள்ள ஒரு மக்கள் கூட்டமாக தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழும் ஒரு சூழலே ஆகும். எனவே எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், எம்மை நாமே நிர்வகிக்கவும், ஆகக்குறைந்தது அதிகாரமுடைய மாகாணசபை அமைப்பு முறையாவது அவசியமாகும். எனவே ஒரு ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற முறையில் எமது கோரிக்கை நியாயமானதாகும்.

அடுத்து, இதன் சாத்தியப்பாட்டை நோக்குவோம். வடக்கு,கிழக்கு மக்களின் முன் ஆரம்பத்தில் வைக்கப்பட்ட மாவட்ட சபையானது அன்று நடைமுறைச் சாத்தியமற்றதாகவே காணப்பட்டது. இனவாத அரசின் முன்னால் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பது நடைமுறை சாத்தியமற்ற விடயம் தான். ஆனால் ஒரு கோரிக்கை மக்கள் மயமாக்கப்பட்டு அந்த மக்களினால் அக்கோரிக்கை தாங்கி நிற்கப்படும்போது அக்கோரிக்கைக்காக எந்தத் தியாகத்துக்கும் தயாராகும்போது மாத்திரம்தான் அது நடைமுறைச் சாத்தியமாகிறது.

கேள்வி: விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனைய சகல வடக்கு கிழக்கு அமைப்புகளும் மலையக மக்களுக்கு நேரடியாக தலைமை தாங்க முயற்சிசெய்து வந்துள்ளன. இவற்றைப் பற்றி தங்களது கருத்து என்ன?

பதில்: ஆயுதம் தாங்காத வடக்கு கிழக்கு இயக்கங்

மலையக மக்கள் முன்னணி அமைக்கப்பட்ட பின்பே மலையகத்தில் ஒரு புதிய தலைமை உருவாகி வருகின்றது. அரசியல் பிரச்சினைகளிலும், போராட்டங்களிலும் மலையக மக்கள் இ தொ கா வை அல்லது மலையக மக்கள் முன்னணியை மாத்திரமே தமது

# மினிபஸ்களில் இப்படியும் தொல்லை

ஆசிரியர்,
ஈழநாதம்,

மினிபஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் சில சமயம் இடைவழியில் பல மணிநேரம் காவல் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு மினிபஸ் வழியில் டயருக்கு காற்றுப் போனால் அல்லது எரிபொருள் முடிவுற்றால் அதனைத் திருத்து மட்டும் வேறு மினிபஸ்ஸில் ஏறக் கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி பின்னால் வரும் மினிபஸ் ஒன்றில் நாம் ஏற முயன்றால் ஏற்ற வேண்டாம் அது சங்க விதிகளுக்குப்பிழை என்றும் சொல்கிறார்கள்.

இவர்கள் நேரத்துடன் காற்று, டயர், எரிபொருளை பரிசோதித்து சேவைக்கு வருவதில்லை இதனால் எமது அவசர வேலைகளுக்கு போக முடியாது அவர்களுடனேயே இருக்க வேண்டுமா?

அத்துடன் புதியவர் ஒருவர் ஒரு மினிபஸ்ஸில் ஏறினால் அவரிடம் அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது அவர் பயணக்கட்டணம் எவ்வளவு என்று நடத்துனரிடம் கேட்டால் நான்கு ரூபாவுக்கு ஐந்து ரூபா என்று சொல்வார்.

## மக்கள் மடல்

அண்மையில் போக்குவரத்து அமைச்சர் சகல மினிபஸ்களும் தமது கட்டண விபரங்களை மினிபஸ்களில்பொது மக்களுக்கு தெரியும் வகையில் விளம்பரமாக போடவேண்டும் என்று அறிவித்தார்.

எமது பகுதி மினிபஸ்களில் இந்த முறை நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

-ராஜன்
கோப்பாய்.

# காத்தவராயன் நாடகம் முதலிடத்தைப் பெற்றது

(கொழும்புத்துறை)

வரணி கொத்தணிப் பாடசாலைகளின் தமிழ்த்தின சிறந்த வெளிநாடகப் போட்டியில் வரணி வடக்குஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முதலிடத்தை பெற்றுக் கொண்டது.

யாழ்.கோட்ட மட்டத்தில் கலந்து கொண்ட சின்னஞ் சிறுவர்களின் ஒரேயொரு நாடகமும் இது வேயாகும்.

முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட சிறுவர்களின் ''காத்தவராயன்'' நாடகம் அனைவரினதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டது. இந் நாடகத்தில் க.ரங்கத்துரை, இ. விஜிதன், ந.மதியழகன், க. சற்குணராசா, ந.சபாகரன், கு. பிறேமதாஸ், இ. சத்தியச் செல்வி, சி. அழகுராணி, செ. தர்மபாலா, க. யோகேஸ்வரி, தி.றெஜீனா, கோ. சற்குணதேவி ஆகிய சிறுவர், சிறுமியர் நடித்துள்ளனர்.

தென் மராட்சியில் இடம் பெற்ற எழுச்சி விழாவிலும் இந்த நாடகம் மேடையேற்றப் பட்டது. உசன் கொத்தணி மூலாதார பாடசாலைகளின் நூலக விருத்திக்காக நடை பெற்ற கலை விழாவிலும் இது இடம் பெற்று பலரின்பாராட்டை பெற்றது.

# கூட்டுறவு முறையினால் மக்களுக்கு நன்மையுண்டு

(கிளிநொச்சி)

மக்கள் கூட்டுறவு முறையில் இயங்குவதனால் பல நன்மைகளை அடையமுடியும். வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகள் கூட்டுறவு முறையில் இயங்கி அரசு வழங்கும் கடன் உதவிகளைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

கிராமிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மத்தியில் பேசியகிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி .பி. தங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி கால் நடை வைத்தியசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கால்நடைவைத்திய அதிகாரி திருமதி.பி. தங்கராசாமேற்கண்டவாறு கூறினார்.

கால்நடைவளர்ப்போர் கூட்டுறவு முறையில் இயங்கினால் பல நன்மைகளைப் பெறமுடியும். இவற்றில் ஒன்று கடன் வழங்கும் திட்டமாகும்.

வேலை வாய்ப்பற்றிருக்கும் படித்த இளைஞர் யுவதிகள் கூட்டுறவு முறையில் இயங்கி அரசு வழங்கும் கடனைப் பெற்று அப்பணத்தை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறவேண்டும்.

மாடுவளர்ப்பு, ஆடுவளர்ப்பு, கோழிவளர்ப்பு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் நல்ல வருவாயைப் பெறமுடியும். அத்தோடு பால்சேகரிப்புக்கும் கடன் வழங்கப்படும் என்றார்.

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (49)

# கல்லூரிச் சுற்றுலாவில் வெளியாரும் பங்கு

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல கல்லூரி யொன்றுஅண்மையில்மேற் கொண்ட கல்விச் சுற்றுலா குறித்து அதிருப்திகள் தெரிவிக்கப் படுகின்றன.

முன்னாள் அதிபரும் கலந்து கொள்வதாக மாணவருக்கும் பெற்றோருக்கும் அறிவிக்கப் பட்டது. ஆனால் இறுதியில் அவர் அழைக்கப்பட வில்லையாம்.

இச் சுற்றுலாவில் ஏனைய பாடசாலை மாணவர்கள் உட்பட வெளியார் சிலரும் கலந்து கொண்டார்களாம்.

இதனை விரும்பாத கல்லூரி மாணவர்கள் இச் சுற்றுலாவிலிருந்து. விலகிக்கொண்டாலும் இதுவரை செலுத்திய கட்டணம் மீள தரப்படவில்லையென மாணவ வட்டாரங்கள் தெரிவித்தன (37)

Registered us a News Paper at the G. P. O.

ஈழநாதம்

## பயிலுநர் ஆசிரியர் சங்கம்

(மானிப்பாய்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பயிலுநர் ஆசிரியர் சங்கம் கடந்த 2ஆம் திகதியன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன் தலைவராக சூரிய குமார் தெரிவு செய்யப்பட்டார்.



வவுனியா

# நகரசபை கட்டிடத்திலிருந்து பொலிஸார் வெளியேறுகின்றனர்

(வவுனியா)

பொலிஸ் நிலையமாகச் செயல்பட்டு வரும் வவுனியா நகரசபைக் கட்டிடம் இம் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் நகரசபையிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு. நவரட்ணராஜா தெரிவித்துள்ளார்.

மேற்படி நகரசபைக்குரிய கட்டிடத்தில் கடந்த சில வருடங்களாக பொலிஸ்காரர் இருந்து வருகின்றனர். இக் கட்டிடத்தை மீண்டும் நகர சபையிடம் ஒப்படைப்பதில் இழுபறி நிலை இருந்து வந்தது தெரிந்ததே.

வவுனியாவில் சில தினங்களுக்கு முன்னர் நகரசபை அதிகாரிகள் சிலருக்கும் பொலிஸ் அத்தியட்சகருக்குமிடையே இடம் பெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி கட்டிடம் எதிர்வரும் முப்பதாம் திகதிக்கு முன்னர் வவுனியா நகரசபை நிர்வாகத்திட்டம் ஒப்படைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

வவுனியா விமான நிலைய ஓடு பாதை விஸ்தரிப்பிற்காக சுவீகரிக்கப்பட்ட காணியிலிருந்து பத்து ஏக்கர் நிலம் வவுனியாவில் புதிய பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

மேற்படி காணியிலேயே புதிய பொலிஸ் நிலையம் அமைய இருப்பதால் நகரசபைக் கட்டிடத்தில் தங்கியுள்ள பொலிஸ் காரர்களில் பலர் பகுதி பகுதியாக குறிப்பிட்ட பத்து ஏக்கர் காணிப் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. (தி)

## விசேட தினத்தை முன்னிட்டு பாடசாலை மூட முடியாது

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் எந்தவொரு விசேடவைபவங்களையும் காரணங்காட்டி அந்நிகழ்ச்சி நடைபெற்று முடிந்த மறு தினத்தை விடுமுறைநாளாக்க முடியாது என யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள் போன்ற விசேட வைபவங்கள் நடைபெறும் தினத்திற்கு மறு தினம் அதில் ஈடுபட்டவர்கள் ஓய்வு பெறுவதற்காக விடுமுறை வழங்குதல் மரபாகப் பின்பற்றப்பட்டுவந்தது.

இனி மேல் இவ்விடுமுறை வழங்கப்படமாட்டாது. இது சம்பந்தமான சுற்று நிருபம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. (மு)

## 'காலப்போக்கில் தமிழரை பாதிக்கும்'

### மாகாணசபை கலைப்புக்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் பற்றி வாசு

(கொழும்பு)

''மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் அரசியல் அமைப்புத்திருத்தம் இன்று வடக்கு - கிழக்கு மாகாண சபைப் பிரச்சினைக்கு தீர்வு காண வழி வகுக்கலாம். ஆனால் காலப்போக்கில் இது தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமையும்'' நவ சமசமாஜக்கட்சித் தலைவர்வாசுதேவ நாணயக்காரா நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் நேற்றுக் கூடியபோது மட்டக்களப்பு

அநுரா பண்டார நாயகா, மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. மாவை சேனாதிராசா ஆகியோர் திரு. சாம் தம்பிமுத்துவின் சேவைகளை எடுத்துக் கூறினர்.

''இதுபோன்ற அரசியல் படுகொலைகள் இனியும் தொடரக் கூடாது என்றும் எம். பிக்களுக்கு அரசாங்கம் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டுமென்றும்'' அநுரா பண்டார நாயகாவும், மாவை சேனாதிராசாவும் கேட்டுக் கொண்டனர்.

நவ சம சமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காரா திரு. சாம் தம்பிமுத்

### படகுகளுக்கு தகைமைச் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மகோற்சவம் விரைவில் ஆரம்பமாக உள்ளதை இட்டு மகோற்சவ காலத்தில் சேவையில் ஈடுபடும் படகுகளுக்கு பரிசோதனை மூலம் தகைமைச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

இப்படகுகளை பரிசோதிக்கும்பொறுப்பை ஆழ்கடல் பொறியியலாளர் எம்.மகாதேவா பொறுப்பேற்றுள்ளார். இவருடைய அறிக்கையுடன் கப்பல் வணிகதிணைக்களம் சேவைப் படகுகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## வவுனியாவில், நகை பணம் கொள்ளை

(வவுனியா)

திரனைக் கட்டிவைத்து குடும்

### சொய்சா

(1ஆம் பக்கத் தொர்டர்ச்சி))

றிச்சேர்டி சொய்சா வழக்குத் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளில் சட்டத்தரணி பேர்ட்டி வீரக்கோன் கலந்துகொண்டால், சொய்சாவுக்கு ஏற்பட்ட முடிவே இவருக்கும் ஏற்படும் என்று கொலைப் பயமுறுத்தல் கடிதங்களும், தொலைபேசி மிரட்டல்களும் வந்துள்ளன. சட்டத்தரணி பேர்ட்டி வீரக்கோன் இம் மிரட்டல்கள் பற்றி வழக்கறிஞர்கள் சங்க செயற்குழுவிற்குத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துத் தாம் மாண்புமிகு ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளதாகவும், அரசாங்கம் அதன் முழுச்சக்தியையும் பயன்படுத்தி இச் சதிகாரக் குழுவைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமாறு வழக்கறிஞர் சங்க நிர்வாகக் குழு

## "தாமு" ஞாபகார்த்தவிழா

(புத்தூர்)

புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் வீரவேங்கை தாமு ஞாபகார்த்தமாக விளையாட்டு விழாவை நடாத்துகின்றது. இவ்விழாவில் காலை நிகழ்ச்சிகளாக 15 மைல் மரதன் ஓட்டம் (ஆண்கள்), 50 மைல் சைக்கிளோட்டம் (ஆண்கள்) 15 மைல் சைக்கிளோட்டம் (பெண்கள்) நடைபெறவுள்ளன. மற்றும் ர5 மைல், சைக்கிளோட்டம் (40 வயதிற்கு மேற்பட்டோர் அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும்) 2 மைல் மரதன் ஓட்டம் (புத்தூர் கிழக்கு கிராமசேவகர் பிரிவுக்குள் வசிக்கும் 12 வயதுக்குட்பட்டவர்கள்), 25 மைல் சைக்கிளோட்டம் (புத்தூர்க்கிராம சபைக்குட்பட்டவர்கள்) என்பன நடைபெறவுள்ளன.

பிற்பகல் நிகழ்ச்சிகளாக உதைபந்தாட்டப் போட்டிகளும், பரிசளிப்பும் நடைபெறும் பிற்பகல் நிகழ்ச்சிகளின் போது விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

### ஆசிரியர்

I ஆம் ப்க்கத் தொடர்ச்சி)

ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய பல உலக நாடுகளில் இங்கு நடப்பது போன்று ஆசிரியர்கள் இடமாற்றங்கள் பற்றி தான் கேள்விப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

### சுற்றாடல்

(கொழும்பு)

''மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் அரசியல் அமைப்புத்திருத்தம் இன்று வடக்கு - கிழக்கு மாகாண சபைப் பிரச்சினைக்கு தீர்வு காண வழி வகுக்கலாம். ஆனால் காலப்போக்கில் இது தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமையும்'' நவ சமசமாஜக்கட்சித் தலைவர்வாசுதேவ நாணயக்காரா நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் நேற்றுக் கூடியபோது மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. சாம் தம்பிமுத்துவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி, பதில் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயகா, மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. மாவை சேனாதிராசா ஆகியோர் திரு. சாம் தம்பிமுத்துவின் சேவைகளை எடுத்துக் கூறினர்.

''இதுபோன்ற அரசியல் படுகொலைகள் இனியும் தொடரக் கூடாது என்றும் எம். பிக்களுக்கு அரசாங்கம் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டுமென்றும்'' அநுரா பண்டாரநாயகாவும், மாவை சேனாதிராசாவும் கேட்டுக் கொண்டனர்.

நவ சம சமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்காரா திரு. சாம் தம்பிமுத்துவுக்கு அஞ்சலி செலுத்திப் பேசிவிட்டு வடக்கு கிழக்கு மாகாணசபை பற்றிக் குறிப்பிடுகையில் மேற் கண்டவாறு மாகாண சபை கலைப்பு பற்றியும் கூறினார்.

காலத்தில் சேவையில் ஈடுபடும் படகுகளுக்கு பரிசோதனை மூலம் தகைமைச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

இப்படகுகளை பரிசோதிக்கும்பொறுப்பை ஆழ்கடல் பொறியியலாளர் எம்.மகாதேவா பொறுப்பேற்றுள்ளார். இவருடைய அறிக்கையுடன் கப்பல் வணிகதிணைக்களம் சேவைப் படகுகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தினம் அதில் ஈடுபட்டவர்கள் ஓய்வு பெறுவதற்காக விடுமுறை வழங்குதல் மரபாகப் பின்பற்றப்பட்டுவந்தது.

இனி மேல் இவ்விடுமுறை வழங்கப்படமாட்டாது. இது சம்பந்தமான சுற்று நிருபம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப் படுகிறது. (மு)

தரணி பேர்ட்டி வீரக்கோன் கலந்துகொண்டால், சொய்சாவுக்கு ஏற்பட்ட முடிவே இவருக்கும் ஏற்படும் என்று கொலைப் பயமுறுத்தல் கடிதங்களும், தொலைபேசி மிரட்டல்களும் வந்துள்ளன. சட்டத்தரணி பேர்ட்டி வீரக்கோன் இம் மிரட்டல்கள் பற்றி வழக்கறிஞர்கள் சங்க செயற்குழுவிற்குத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துத் தாம் மாண்புமிகு ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளதாகவும், அரசாங்கம் அதன் முழுச்சக்தியையும் பயன்படுத்தி இச் சதிகாரக் குழுவைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமாறு வழக்கறிஞர் சங்க நிர்வாகக் குழு அரசாங்கத்தை கேட்டுள்ளது.

கார்த்தமாக விளையாட்டு விழாவை நடாத்துகின்றது. இவ்விழாவில் காலை நிகழ்ச்சிகளாக 15 மைல் மரதன் ஓட்டம் (ஆண்கள்), 50 மைல் சைக்கிளோட்டம் (40 வயதிற்கு மேற்பட்டோர் அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும்) 2 மைல் மரதன் ஓட்டம் (புத்தூர் கிழக்கு கிராமசேவகர் பிரிவுக்குள் வசிக்கும் 12 வயதுக்குட்பட்டவர்கள்), 25 மைல் சைக்கிளோட்டம் (புத்தூர்க்கிராம சபைக்குட்பட்டவர்கள்) என்பன நடைபெறவுள்ளன.

பிற்பகல் நிகழ்ச்சிகளாக உதைபந்தாட்டப் போட்டிகளும், பரிசளிப்பும் நடைபெறும் பிற்பகல் நிகழ்ச்சிகளின் போது விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

# ஐந்தாவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் மகாநாடு

(கொழும்பு)

ஐந்தாவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் மகாநாடு எதிர் வரும் டிசம்பர் மாதம் தென் இந்தியாவின் கீழ்க்கரையில் நடைபெறும்.

டிசம்பர் மாதம் 28 ஆம் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் நடைபெறும் இம் மகாநாட்டிற்கு இலங்கைப்படைப் பிலக்கிய அறிஞர்களுக்கும், கல்வி மான்களுக்கும் பங்கு பெற சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்காக இம் மகா நாட்டின் இலங்கை அமைப்புக் குழுத் தலைவர் எம்.எம். உவைஸ் முஸ்லிம் சமயக்கலாசாரராஜாங்க அமைச்சர் ஏ. எச்.எம். அஸ்வர் உடன்பேச்சு வார்த்தை நடத்தினார்.

இம் மகாநாட்டிற்கு இலங்கையில் இருந்து ஆய்வுக் கட்டுரைகள், வரலாற்று நூல்கள், கவிதைகள் வெளியிட விரும்புவோர் பாணந்துறையைச் சேர்ந்த பேராசிரியர் எம்.எம். உவைஸை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மகாநாட்டின் போது சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள், படைப்பிலக்கியங்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

# ஓட்டோக்கள் வாங்க இலங்கை வங்கி கடனுதவி

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஓட்டோக்கள் வாங்குவதற்கு இலங்கைவங்கி கடனுதவி வழங்கும். இவ்வாறு யாழ். இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இத் தொழிலை மேற்கொள்ள விரும்புவோருக்கு 50,000 ரூபா வரையிலான கடன் வழங்கப்படும். கடன் பெறுபவர் தமது சாரதி அனுமதிப் புத்தகத்தை (லைசென்ஸ்) சமர்ப்பிக்க வேண்டும். கடன் பணத்தை திருப்பிச் செலுத்தும் வரை வாகனத்தின் பதிவுப்புத்தகம் இலங்கை வங்கியின் பொறுப்பிலேயே இருக்கும்.

யாழ்.நகரத்தைவிட ஏனைய பகுதிகளில் இத் தொழிலை மேற்கொள்ள விரும்புவோருக்கே முன்னுரிமை வழங்கப் படும்.

கடனுதவி பெற விரும்புவோர் தமது பகுதி இலங்கை வங்கிமுகாமையாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். எனவும் அவர் தெரிவித்தார். (மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வவுனியாவில், நகை பணம் கொள்ளை

(வவுனியா)

வவுனியா முருகனூர் என்ற கிராமத்தில் ஒரு கொள்ளையர் கோஷ்டி கத்தி, கிரனேட், ரைபிள் ஆகிய ஆயுதங்களுடன் சென்று ரவீந்திரராஜா மகேந்திரன் என்பவர் வீட்டில் கொள்ளை யடித்துள்ளது.

கடந்த ஞாயிறன்று இரவு ஆயுதபாணிகளாகச் சென்ற நான்குபேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டியினர் மகேந்திரனைக் கட்டிவைத்து குடும்பத்தினரைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி நகை ரொக்கப்பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

# தற்காலிக அதிபர்கள் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை

(சம்பளை)

நாட்டில் சில பாடசாலைகளில் பல காலமாகத் தற்காலிக அதிபர்கள் பணி புரிகின்றனர். அவர்களது பிரச்சினைகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

இன்று ஆசிரியர்கள் தமது விருப்பத்தின்படியே மாற்றம் பெறுகின்றனர். சில பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் மட்டுமே உள்ளார். சில பாடசாலைகளில் இரு ஆசிரியர்கள் மட்டுமே இருக்கின்றனர்.

இவர்கள் பல கஷ்டங்களுடன் தனியாகவே எல்லாம் செய்து சிறப்பாகக் கடமையாற்றுகின்றனர்.

தற்போது ஒரு வருடத்தில் ஆறாயிரம் ஆசிரியர்களுக்கே பயிற்சி வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் அதிகமான ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

## பொதிகளைச்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு சம்பவத்தில் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய பெண்மணி ஒருவருக்கு சுங்கத் தீர்வையற்ற பொருட்களைப் பணம் பெறாமல் வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதில் தொடர்பான இரு சுங்கத் தீர்வையற்ற கடைகள் மூடப்பட்டு, அதன் உரிமையாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் இலட்சக்கணக்கான அபராதம் விதிக்கப்பட்டது.

## எம். பிக்களின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்க மற்றும் எதிர்க் கட்சி எம். பிக்கள் இந்த விசாரணை தொடர்பாக பல கஷ்டங்களை எதிர்நோக்குவதாக தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் சபாநாயகர் எம். எச். முகமத் கூறினார்.

## மூன்று

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் விசு, மகான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த மூன்று இராணுவத்தினரும் கல்முனை மாடிவீட்டு இராணுவ முகாமில் இருந்து இராணுவ அதிகாரிகளுக்கு தெரியாமல் வெளியே வந்த போது விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எச். ஆர். வணிகசேகரா (அம்பாறை), ரஞ்சன்ரூபசிங்க (கேகாலை), டீ. ஏ, விஜயக்கோன் (மினுவாங்கொட) ஆகியோரே இவ்வாறு பிடிபட்டு விடுவிக்கப்பட்டவர்களாவர். (37)

## மாகாணசபையை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் வைத்திருக்க மாட்டார்களென்றும் ஒரேயடியாக, உடனடியாக ஆயுதத்தைக் கீழே போடச்செய்ய முடியாதென்றும், படிப்படியாக ஆயுதங்களைக் கீழே வைக்கச் செய்யலாமென்றும் அமைச்சர் ரஞ்சன் நம்பிக்கை தெரிவித்தார்.

முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் மற்றும் பல மாகாண சபை உறுப்பினர்களும் தலைமறைவாகி விட்டதால் வடக்கு, கிழக்கு மாகாணசபை செயலிழந்தது என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ரஞ்சன் கூறினார்.

வரதராஜப்பெருமாள்இலங்கைக்கு வருவதில் ஏதும் பிரச்சினையிருக்கிறதா? என்று ஒரு நிருபர் கேட்டபோது, இலங்கையின் சட்டதிட்டங்களுக்கேற்ப நடந்து கொண்டால் அவர் இங்கு வருவதில் பிரச்சினை எதுவுமில்லை என்று அமைச்சர் ரஞ்சன் சொன்னார்.

## உள்ளூராட்சி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு அனுமதி வழங்கும் பொறுப்பு ஜூலை மாதம் முதல் சூழல் பாதுகாப்புச் சபையின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. சூழல் பாதுகாப்புச்சபை இவ்வதிகாரங்களைப் பிரதேச சபைகளிடம் கையளித்துள்ளது.

இம்மாநாட்டில் உள்ளூராட்சித் திணைக்களப் பிரதிநிதிகளுக்குச் சுற்றாடல், பாதுகாப்புச் சம்பந்தமான வழிகாட்டல் பற்றி எடுத்துரைக்கப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (மு)

## ஆசிரியர்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய பல உலக நாடுகளில் இங்கு நடப்பது போன்று ஆசிரியர்கள் இடமாற்றங்கள் பற்றி தான் கேள்விப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

## சுற்றாடல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த இவ் மகா நாட்டை இலங்கைச் சுற்றாடல் பாதுகாப்பு வெகுஜன தொடர்பாளர் நிறுவனமும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் ஒழுங்கு செய்திருந்தன.

இலங்கையில் சுற்றாடல் பாதுகாப்பை பேணும் பெருமளவு முயற்சி வெகுசனத் தொடர்புகளுக்கே இருக்கிறது என்று அமைச்சர் விமல் விக்கிரம சிங்கா குறிப்பிட்டார்.

## கடத்தல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐயாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி எதுவும் இன்னும் மதிப்பிடப்படவில்லை எனச் சுங்கத் திணைக்கள அதிகாரி திரு. கணநாதலிங்கம் தெரிவித்துள்ளார். (அ)

## அங்கீகரிக்கப்பட்ட

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களாகவோ இருக்க முடியாது.

அச்சுற்றுநிருபத்தில் மேலும் இவ் முத்திரைகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 4 வாரங்களுக்குச் செல்லுபடியாகும் எனவும் அதிபர், வகுப்பாசிரியரின் உதவியோடு தினமும் உணவினை பாடசாலைக்கு கொண்டுவரும் மாணவர் பற்றிய பதிவேடுகளை வகுப்புரீதியாக வைத்திருத்தல் வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. (36)

## தபால்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்துள்ளனர். சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மூன்று ஊழியர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. (62)


# தேவை

## அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம் லிமிற்றெட்

தபாற் கந்தோரடி, வட்டுக்கோட்டை.

பதிவு இல:- S. 154

(1) முகவர்கள்:-

கமிஷன் அடிப்படையில் அங்கத்தவர்களை சேர்ப்பதற்கும் பணம் வசூலிப்பதற்கும் முகவர்கள் தேவை. 25 வயதிற்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2) கணக்கு இலிகிதர் பயிற்சியாளர்கள்:-

இப் பயிற்சி நெறிக்கு பொதுத்தராதரப் பத்திரம் (உயர்தரம்) சித்தியடைந்தவரும் கணக்கியலில் திறமைச் சித்தி பெற்றவரும் 30 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சி காலத்திற்கு அலவுன்ஸ் வழங்கப்படும். சுருக்கெழுத்து, தட்டச்சு அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கவர்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு கல்வித் தகைமை நற்சாட்சிப் பத்திரங்கள் போன்ற ஆவணங்களின் போட்டோ பிரதியுடன் 15-06-90க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

(B/1112) - பொது முகாமையாளர்.